மும்மாத சஞ்சிகை : மலர் : 68 – இதழ் : 02 ஏப்ரல், மே, ஜூன் 2024

# தூதன்

“ உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு,
என் கண்களைத் திறந்தருளும்.” (சங். 119:18)




இலங்கை கிறிஸ்தவ சீர்திருத்த திருச்சபையின் வெளியீடு

ஆரம்பம் : 1956
மலர் : 68
இதழ் : 02
காலம் : 2024 ஏப்ரல், மே, ஜூன்
ஆசிரியர் : போதகர். ஒகஸ்டின் போல்
தொலைபேசி : 011 2675053
கைபேசி : 0777 045994
மின்னஞ்சல் : augustinejams@gmail.com
விலை : தனிப்பிரதி 125/-
வருட சந்தா 500/-
வெளியீடு : இலங்கை கிறிஸ்தவ சீர்திருத்த திருச்சபை
(363, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06.)
கணனி வடிவமைப்பு :
திரு. ஜோசப் ஜெயசீலன் மெத்யூசலன்


"ஒரு மரத்தைக் குறித்தாவது நம்பிக்கையுண்டு.
அது வெட்டிப்போடப்பட்டாலும் திரும்பத்தழைக்கும்,
அதின் இளங்கிளைகள் துளிர்க்கும்." (யோபு 14:7)

## இதழின் உள்ளே ...


1. ஆசிரியரிடமிருந்து ...
2. நிறைவானவரைக் காட்டும் வழிகாட்டி ...
3. நீங்க நல்லா இருப்பீங்க ...
4. அவருடைய சத்தம் ...
5. இரத்த சரித்திரம் – சார்லஸ் தியோபிலஸ் எவால்ட் ரீனியஸ் ...
6. கடவுளின் நன்மை தன்மைகள் ...
7. கதை நேரம் – "படகுச் சவாரி"
8. நிறந்தீட்டுவோம்
9. குறுக்கெழுத்துப் புதிர் 06.


# ஆசிரியரிடமிருந்து ...

அன்பின் வாசகர்களே!
எம்மை வழுவாதபடி காக்கவும், தம்முடைய மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ள ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

இன்னுமொரு இதழை உங்கள் கரங்களில் சமர்ப்பிக்க உதவிய தேவனுக்கு எல்லா துதி கன மகிமையும் உண்டாவதாக.

இந்த இதழுக்கு ஆக்கங்களை எழுதி உதவிய போதகர்களுக்கும், சகோதரர்களுக்கும், மற்றும் எழுத்துப் பிழைகளைச் சரிபார்த்த திருமதி. வித்தியா சஷிகுமார் அவர்களுக்கும் மற்றும் கணனி வடிவமைப்பு செய்த திரு. ஜோசப் ஜெயசீலன் மெத்யூசீலன் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*"கிறிஸ்துவில் வளர்தல் என்பது, ஒருவனின் தனிப்பட்ட முன்னேற்றம் மட்டுமல்ல?"*

இன்றைய நவீன கிறிஸ்தவன், தனது நாளாந்த நடத்தையாலும், தனது பக்திமயமான கிரியையாலும் ஒரு போலியான வளர்ச்சியை அல்லது ஒரு போலியான முதிர்ச்சியை உலகிற்குக் காண்பிக்க

முற்படுகின்றான். அதாவது ஆவியில் நிரம்பி ஜெபித்தல், பக்தி பரவசப்படுதல், மற்றும் ஆவியை மையமாகக் கொண்ட வாழ்க்கை வாழுதல். ஆக அவன் ஆவியின் கனியை விட, ஆவியின் வரங்களை மேன்மையாகக் கருதி அவற்றை நாடித், தேடி, கற்று அவைகள் தங்களுக்குள் இருந்தால் மாத்திரமே தாங்கள் ஒரு மெய் கிறிஸ்தவன் என்றும் தாங்கள் கிறிஸ்துவுக்குள் முதிர்ச்சியடைந்து, வளர்ந்து வருகின்றோம் என்றும் காண்பிக்க முற்படுகின்றான்.

பிரியமானவர்களே! இந்த வளர்ச்சியானது ஒருவனை உலகிற்கு மேன்மையானவானாக, வல்லமையுள்ளவனாக, போற்றப் படுகின்றவனாக, மற்றவர்களை விட தேவ அன்பில் நிறைந்தவனாக காண்பிக்கும். மற்றும் பலரை கவர்ந்து அவனைப் பின்பற்றத் தூண்டும். ஆனால் உலகிற்குப் பெரிதான தாக்கத்தை ஏற்படுத்தி, இரட்சகராகிய இயேசுவண்டை கொண்டுவராது. என்பதை நாம் தெளிவாக அறிந்து கொள்ளவேண்டும்.

ஆனால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எம்மிடம் இவ்விதமான ஒரு வளர்ச்சி அல்லது முதிர்ச்சியை எதிர்பார்க்கவில்லை. எமது நாளாந்த வாழ்வில் பாவத்துடன் போராடி, மனந்திரும்பி, குணப்பட்டு, அவர் தரும் சமாதானத்தையும் ஆறுதலையும் அனுபவித்து, எந்த காலத்திலும், எந்த சூழ்நிலையிலும் அவரைவிட்டு பின்வாங்காமல் மனமகிழ்வோடு வாழ்கின்ற வாழ்வையே அவர் எதிர்பார்க்கின்றார்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எதிர்பார்க்கின்ற இந்த நிலையைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடும் போது. கொலோ 1:28இல் தேறினவனாக என்ற வார்த்தையை பயன்படுத்துகின்றார். அதாவது தேறினவனாக என்ற வார்த்தையானது கிரேக்க மொழியில் **டெலியோஸ்** எனும் வார்த்தையும், ஆங்கிலத்தில் perfect என்ற வார்த்தையும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இச் சொல்லானது பூரணமான, முற்றுப்பெற்ற, முழுமையான, குறைபாடற்ற என விளக்கம் தருகின்றது. அதாவது கிறிஸ்துவுக்குள் பூரண அல்லது முழுமை பெறவேண்டும் என்பதை அப். பவுல் குறிப்பிடுகின்றார்.

அப். பவுல் தேறின நிலையை அடைந்து விட்டேன் என்று குறிப்பிட வில்லை. மாறாக எந்த மனுஷ னும் கிறிஸ்துவுக்குள் தேறினவனாக நிறுத்தும் படிக்கு என்று, எதிர்காலத்தை நோக்கியதாகவே குறிப்பிடுகின்றார். தேறின நிலையை அடைந்து விட்டேன் என்று குறிப்பிடாமல். அது ஆசையாய் தொடரவேண்டியதாக குறிப்பிடுகின்றார். பிலி 3:12 நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றிலும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து

இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய் தொடருகிறேன். இந்த தேறின நிலையை அடைவதுதான் எமது இலக்காக இருக்க வேண்டுமே தவிர. இந்த உலகத்தையும் எம்மையும் ஏமாற்றுகின்ற ஒரு போலியான வளர்ச்சியாக இருக்க கூடாது.

ஆகவே இந்த தேறின நிலையை அடைய வேண்டும் எனும் இலக்கை அடைவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைக் குறித்து அப். பவுல் கொலோசெயர் 1:24-29இல். பகுதியில் நான்கு காரியத்தை குறிப்பிடுகின்றார்.

***1. கிறிஸ்துவை வாழ்வாக கொள்ளுதல் (வ. 28)***

ஒருவன் கிறிஸ்துவுக்குள் தேறின நிலையை அடைவதற்கான முதலாவது காரியத்தை அப். பவுல் 28ம் வசனத்தில் குறிப்பிடுகின்றார். பாருங்கள் அவரையே நாங்கள் அறிவித்து. இந்த அறிவித்தல் என்பதற்கு ஆங்கிலத்தில் Preach என்ற வார்த்தை பாவிக்கப்படுகின்றது. இதன் விளக்கமானது **பிரசங்கம்** என்று குறிப்பிடப்படுகின்றது. அதாவது எமது இரட்சகரான இயேசு கிறிஸ்துவையே நாங்கள் பிரசங்கிக்கிறோம் என்று அப். பவுல் குறிப்பிடுகின்றார்.

அது மாத்திரமல்ல 23ம் வசனத்திலே தான் எதற்காக ஊழியக்காரனானேன் என்பதையும் குறிப்பிடுகின்றார். பாருங்கள் அந்தச் சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டுவருகிறது. அதற்கென்றே பவுலாகிய நான் ஊழியக்காரனானேன். சுவிசேஷம் என்பது என்ன? எமக்கு ஓர் இரட்சகர் உண்டு என்பதை தெரிவிப்பதுதான் அந்த சுவிசேஷம். அது வானத்தின் கீழிருக்கிற சகலருக்கும் பிரங்கிக்கப்பட்டு வருகின்றது. அந்த இரட்சகரை அறிவிப்பதற்காகத்தான் தேவன் தன்னை அவருடைய ஊழியனாக தெரிந்து கொண்டார் என அப். பவுல் குறிப்பிடுகின்றார்.

சுவிசேஷம் வெளிப்படுத்துகின்ற இரண்டு காரியம்

**1) பிதாவின் திட்டம்**

*1. ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்திரத்தில் பங்கடைவதற்கு தகுதியுள்ளவர்களாக்குவது (12ம் வ)*

*2. இருளின் அதிகாரத்திலிருந்து விடுதலையாக்கி குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்துவது. (13ம் வ)*

**2) குமாரனின் நிறைவேற்றல்**

*1. அவரே எமது மத்தியஸ்தர் (18ம் வ)*

*2. இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பை உண்டுபன்னினார் (14ம் வ)*

*3. சமாதானத்தை உண்டாக்கி எம்மை ஒப்புரவாக்கினார் (20-21)*

இதற்கென்றே கிறிஸ்துவை நாம் அறிவிக்கிறோம். அவராலே மாத்திரம்

மனிதனுடைய வாழ்க்கை மாறும். ஆகவே தான் இயேசு சொன்னார் நீங்கள் போகும் இடமெல்லாம் பிரசங்கியுங்கள், என் சுவிசேஷத்தை அறிவியுங்கள் என்று மத். 28:19-20. 1 கொரி. 1:23, 18.

## உ. கிறிஸ்துவால் கடிந்துக் கொள்ளப்படுதல்

ஒருவன் கிறிஸ்துவுக்குள் தேறின நிலையை அடைவதற்கு அவன் செய்ய வேண்டிய இரண்டாவது காரணம் **புத்தி சொல்லுதல்.** பாருங்கள் 28ம் வசனத்தில் எந்த மனுஷனுக்கும் புத்தி சொல்லி என காண்கின்றோம். அதாவது புத்தி சொல்லுதல் என்பது ஆலோசனை சொல்லுவதை குறிக்கின்றது. ஆனால் ஆங்கில வேதாகமத்திலே புத்தி சொல்லு என்ற சொல்லிற்கு warning என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. Warning என்பது **எச்சரிப்பைக்** குறிக்கின்றது. அதாவது வரப்போகும் பேராபத்தைக் குறித்து எச்சரிப்பது. உதாரணமாக நாம் போகும் பாதையில் ஆபத்து இருப்பதைக் கண்டு மற்றவர்களுக்கு நாம் எச்சரிப்பைக் கொடுப்பது போல. வெள்ளம் வரும்போது, புயல் வரும் போது, கட்டிடம் தீ பிடிக்கும் போது எச்சரிக்கை விடுக்கப்படும்.

இந்த எச்சரிப்புகள் அனைத்தும் நம்மை மரணத்திலிருந்து காப்பதற்காகவே. ஆனாலும் மரணம் நம்மை விட்டுவிடுவதில்லை என்பதே யதார்த்தமான உண்மை. ஆனால் பிரியமானவர்களே ஒன்றை மாத்திரம் நீங்கள் கவனமாக சிந்தியுங்கள். பரிசுத்த வேதமும் எம்மை எச்சரிக்கின்றது. அது மரணத்தை குறித்தது அல்ல. அது நித்திய மரணத்தையும் எமது முழுமையான அழிவையும் குறித்து எச்சரிக்கின்றது. எபி 11:17 - விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக் குறித்து தேவ எச்சரிப்புப் பெற்று பயபக்தியுள்ளவனாகி, தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டுபண்ணினான். அதினாலே அவன் உலகம் ஆக்கினைக்குள்ளானதென்று தீர்த்து, விசுவாசத்தினாலுண்டாகும் நீதிக்குச் சுதந்தரவாளியானான்.

நோவாவை அழிவிலிருந்து காக்க ஒரு பேழை கிடைத்தது போல, எமக்கும் ஒரு பேழை உண்டு. அது தான் எமது இரட்சகரான இயேசு கிறிஸ்து. எம்மை நித்திய மரணத்திலிருந்தும், நித்திய ஆக்கினையிலிருந்தும் காப்பாற்றும் பேழை. அந்த பேழையாகிய இயேசு கிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறார் என்பதை மறந்து போக வேண்டாம் என்று அப். பவுல் கொலோசெய சபைக்கும் எமக்கும் எச்சரிக்கின்றார். பாருங்கள் 27ம் வசனத்தை கிறிஸ்துவானவர் மகிமையில் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்.

மெய்யான மனந்திரும்புதலின்

அனுபவத்தைப் பெற்ற அனைவரோடும் அவர் இருக்கின்றார். (Christ in You) ஆகவே தான் அப் பவுல் 22ம் வசனத்திலே இப்படியாக சொல்லுகின்றார் பாருங்கள். நீங்கள் கேட்ட சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கையைவிட்டு அசையாமல், ஸ்திரமாயும் உறுதியாயும் விசுவாசத்திலே நிலைத்திருப்பீர்களானால் அப்படியாகும். அவர் மீதான நம்பிக்கையை விட்டு அசையாமல் இருங்கள் (Not Moved) என்று எச்சரிக்கின்றார். மேலும் அவர் மீதான விசுவாசத்தில் அசையாமல் இருக்க என்ன செய்யவேண்டும் என்று சொல்கின்றார்.

**விசுவாசத்திலே -**

1. **ஸ்திரமாயிருங்கள்**
(நிரந்தரமாய், நிலைத்திருப்பது)
2. **உறுதியாயிருங்கள்**
(திட நம்பிக்கையால், தீர்மானமாய் இருத்தல்)
3. **நிலைத்திருங்கள்**
(இடைவிடாது, தொடச்சியாக)

ஆனால் இன்று அநேகர் அவருடைய விசுவாசத்திலிருந்து விலகி செல்கின்றதைக் காண்கின்றோம். அவர்களை நாம் எச்சரிக்கவேண்டும். எபி. 3:12 சகோதரரே, ஜீவனுள்ள தேவனைவிட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களிலொருவனுக் குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள்.
இயேசு கிறிஸ்துவுக்குள் இல்லை என்றால் அவர்களுக்கு இருக்கும் ஆபத்தைக் குறித்து எச்சரித்து ஆலோசனை சொல்ல வேண்டும். ஆனாலும் அவனைச் சத்துருவாக எண்ணாமல், சகோதரனாக எண்ணி, அவனுக்குப் புத்திசொல்லுங்கள். நியாயம் தீர்ப்பது எமது வேலை இல்லை என்பதை உணர்ந்து அன்போடும், இரக்கத்தோடும் அவர்களுக்கு புத்தி சொல்ல வேண்டும்.

இன்று அநேகர் மற்றவர்களை மாத்திரம் எச்சரிக்கின்றவர்களாக இருக்கின்றார்கள். நாமும் எச்சரிப்பை பெற வேண்டும். உணர்வடைய வேண்டும் பாருங்கள் 1கொரி 10:12 இப்படியிருக்க தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கும் எச்சரிக்கையாயிருக்கக்கடவன்.

ஆகவே பிரியமானவர்களே கிறிஸ்துவுக்குள் தேறின அல்லது முதிர்ச்சியான நிலையை அடைய நாம் எப்போதும் கிறிஸ்துவின் எச்சரிப்பைக் கேட்க வேண்டும். கிறிஸ்துவின் மீதான விசுவாசத்திலிருந்து விலகாதப்படி எச்சரிப்போடு இருக்கவேண்டும். அப்போது நாம் கிறிஸ்துவுக்குள் தேறின நிலையை அடைய முடியும்.

## 3. கிறிஸ்துவின் உபதேசத்தைக் கற்றுக்கொள்ளுதல்.

ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்துவுக்குள் தேறின நிலையை அல்லது முதிர்ச்சி நிலையை அடைவது எப்படி என்பதற்கான மூன்றாவது காரணத்தை அப். பவுல் அதே 28ம் வசனத்தில் குறிப்பிடுகின்றார். பாருங்கள் எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம். இவ்வசனத்தில் உபதேசம் என்னும் சொல்லானது போதித்தல், கற்பித்தல் என்னும் அர்த்தம் தருகின்றது. ஆகவே நாம் கற்பிக்க வேண்டும், அதேவேளை வேத சத்தியத்தை நாம் கருத்தாய் கற்றுக்கொள்ள வேண்டும்.

பாருங்கள் அப். பவுல் மிகத் தெளிவாக 25,26ம் வசனங்களில் குறிப்பிடுகின்றார். தேவவசனத்தைப் பூரணமாய்த் தெரியப்படுத்துகிறதற்கு, உங்கள் பொருட்டு தேவனால் எனக்கு அளிக்கப்பட்ட உத்தியோகத்தின்படியே நான் அந்தச் சபைக்கு ஊழியக்காரனானேன். தேவனுடைய வசனத்தை மக்களுக்கு நான் பூரணமாக அறிவிக்க வேண்டும். இது தேவன் எனக்குக் கொடுத்த உத்தியோகம். அதாவது அவர் எனக்குக் கொடுத்த பொறுப்பு. அதற்காகத்தான் அவர் என்னை ஊழியக்காரனாக்கினார் என்று குறிப்பிடுகின்றார். அது மாத்திரமல்ல மத்தேயு 28:20 பாருங்கள். நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்.

நாம் தேவ வசனத்தை பூரணமாக கற்றுக்கொள்ள வேண்டும். ஒரு கிறிஸ்தவனுடைய வாழ்க்கைக்கு பரிசுத்த வேதாகமமும், அதன் போதனையும் மிக முக்கியமானது. அது அஸ்திபாரத்தைப் போன்றது. அஸ்திபாரம் இல்லாத வீடு எப்படி உறுதியற்றதோ, அவ்வண்ணமாகத்தான் வேத போதனையை புறக்கணிக்கின்ற ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய வாழ்க்கையும் உறுதியற்றதாக இருக்கும். இதை மிக தெளிவாக எமது இரட்சகரான இயேசு கிறிஸ்து மத்தேயு 7:24 - 27 வசனங்களில் குறிப்பிடுவதைக் காணலாம்.

உபதேசம் பண்ணுதல் என்பது இரண்டு காரியத்தை எமக்கு விளக்குகின்றது. முதலாவது தேவன் எப்படிப்பட்டவர் என்பதை தெரிவிப்பதோடு. இரண்டாவதாக அந்த தேவனுக்கு நாம் எப்படி பிரியமாக வாழ வேண்டும் என்பதை விளக்குகின்றது.

இஸ்ரவேலர் எகிப்திலே அடிமைத்தனத்திலிருந்து மீட்ட தேவன் அவர்களுக்கு சீனாய் மலையில் வைத்து மோசே மூலமாக அவர்கள் எப்படி வாழவேண்டும் என்பதை மிக தெளிவாக கற்பிக்கின்றார். அப்போது ஜனங்களின் பிரதியுத்தாரம் என்ன? நம்முடைய தேவனாகிய கர்த்தர் சொல்லுவதையெல்லம் நீரே எங்களுக்குச் சொல்லும் என்றார்கள். காரணம் தேவனுடைய சத்தம் அத்தனை பயங்கரமாக இருந்தது (உபா. 5:26-27). தேவன் மனிதனுடைய வாழ்வுக்கு தேவையான, திருமணம், பாலியல், சகோதர உறவு, சமூக உறவு, உலக பற்று, மற்றும் தேவனை தேடுதல் ஆகிய அனைத்தையும் கற்பித்தார்.

இஸ்ரவேலர் எவ்வளவு கருத்தாய் வேத உபதேசத்தை கற்றுக்கொண்டார்கள் என்பதைப் பாருங்கள் உபா 6:6-9

*1. இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகளை உன் இருதயத்தில் இருக்கக்கடவது.*

*2. நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதி.*

*3. நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசு.*

*4. அவைகளை உன் கையின்மேல் அடையாளமாகக் கடடிக்கொள்வாயாக.*

*5. அவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபகக்குறியாய் இருக்கக்கடவது.*

*6. அவைகளை உன் வீட்டு நிலைகளிலும், உன் வாசல்களிலும் எழுதுவாயாக.*

இன்றைய நவீன மனிதன் கற்றுக் கொள்வதிலே வல்லவன். புதியவைகளையும், புதுமைகளையும் தேடுவதிலே வல்லவன். ஆனால் தேவ வார்த்தையை கற்பதிலே வல்லவனாக இருப்பதில்லை. இன்று நாம் எப்படி வேத உபதேசத்தை கற்றுக்கொள்கின்றோம்? எங்களிடத்தில் காணப்படும் வேத அறிவு எத்தகையது? ஒரு கல்விமான், பட்டம்பெற்ற பண்டிதர், வைராக்கியமான சமய வழிபாட்டு கொள்கையை உடையவர், உயர் குலத்தைச் சேர்ந்தவரான அப். பவுல் சொல்லுகின்றார் (பிலி. 3:7-8) ஆகிலும் எனக்கு லாபமாயிருந்தவைகள் எவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன். அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன். இஸ்ரவேலின் இராஜாவான தாவீது அந்திசந்தி மத்தியான வேளைகளிலும் நான் தியானம்பண்ணி முறையிடுவேன். என்று சொல்லுகின்றார். அவர்கள் பாடுகளின் வழியில் நடந்து சென்ற போதேல்லம், அவர்களை ஆற்றித் தேற்றி கிறிஸ்துவுக்குள் முழுமை பெற செய்தது இந்த வேத உபதேசமே. நாமும் வேத உபதேசத்தை கற்பதற்கு ஆரம்பிப்போமா?

## 4. கிறிஸ்துவின் பெலத்தில் போராடுதல்

ஒருவன் கிறிஸ்துவுக்குள் தேறின அல்லது முதிர்ச்சி நிலையை அடைவதற்காக மூன்று வழிகளை இதுவரை பார்த்துள்ளோம். நான்கவதும் இறுதியுமான வழி என்னவென்று பார்ப்போம். 29ம் வசனத்தைப் பாருங்கள். அதற்காக நான் எனக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி போராடிப் பிரயாசப்படுகிறேன். ஒருவன் கிறிஸ்துவுக்குள் தேறின நிலையை அடைவதற்கு போராட வேண்டும். மேலும் போராடுவதற்காக பிரயாசம் எமக்கு அவசியம் என்று அப். பவுல் குறிப்பிடுகின்றார்.

அப். பவுல் ஒரு மெய் கிறிஸ்தவனை போர் வீரனாக சித்தரிப்பதை, நாம் அவருடைய நிருபங்களில் அனேக இடங்களில் அவதானிக்கலாம். போர் வீரனுக்கான உடை, நடை, பாவனை, அவனுடைய இலக்கு, போராடும் தன்மை என்பவற்றை விளக்குகின்றார். அந்த போர்வீரனைப் போல ஒவ்வொரு கிறிஸ்தவனும் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார். 1தீமோ 6:12 விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்திய ஜீவனைப் பற்றிக்கொள், அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய், அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கை பண்ணினவனுமாயிருக்கிறாய். 2தீமோ 2:3 நீயும் இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கநுபவி. 2தீமோ 4:7 நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்.

ஆகவே நாம் போராட வேண்டும். அந்த போராட்டத்திற்கான பெலனானது எமது சுய ஞானத்தாலோ, சுய பெலத்தாலே வருபவையல்ல. எமது இரட்சகரான இயேசுவே எமக்கு தருகின்றார். 29ம் வசனத்தைப் பாருங்கள். எனக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி அவருடைய வல்லமையானது எனக்கு போராடும் பலத்தை கொடுக்கின்றது.

எபே 6:12 ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடும், துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்கு போராட்டம் உண்டு. இந்த வசனத்தின்படி இன்று இநேகர் தங்களுடைய போரட்டமானது வியாதிகள், வறுமைகள், துன்பம், துயரங்களை தங்களுக்கு வரும் போராட்டமாக நினைக்கின்றார். இவைகளுக்கு வியாதியின் ஆவி, வறுமையின் ஆவி என்று அதை எதிர்த்து விரட்ட வேண்டும் என்று போராடுகின்றார்கள்.

ஆனால் பிரியமானவர்களே எமக்கு இருக்கும் போராட்டத்தை யூதா மிக தெளிவாக குறிப்பிடுகின்றார் பாருங்கள் யூதா 3ம் வசனம். பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராடவேண்டுமென்று உங்களுக்கு எழுதி உணர்த்துவது எனக்கு அவசியமாய்க் கண்டது. விசுவாச துரோகம் நிறைந்த இந்த நாட்களில் எமது விசுவாசத்திற்காகத் தான் நாம் போராட வேண்டும். 1பேதுரு 1:7 அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும், அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும். நாம் என்னத்தை விசுவாசிக்கிறோமோ, யாரை விசுவாசிக்கிறோமோ அதற்காகத் தைரியமாக நிற்க வேண்டும். போராட வேண்டும். அவரில்லாமல் எம்மால் போராட முடியாது.

ஆராய்ச்சியாளர்கள் ஒரு கண்ணாடி பெட்டியிலே விஷம் நிறைந்த பாம்பு ஒன்றையும், இரண்டு தவளைகளையும் அந்த பெட்டியிலே வைத்து அந்தப் பெட்டியை மூடி விடுகின்றார்கள். சில நிமிடங்களுக்குப் பின் அந்த பாம்பு ஒரு தவளையைத் தாக்கி அதை உட்கொள்ளும் போது மற்ற தவளை இந்தப் பாம்பை எதிர்த்து தாக்குவதைக் கவனித்தார்கள். பாம்பை எதிர்த்து தாக்கிய அந்த தவளை வாழ்வதற்கு ஏற்றது என்று அதை பெட்டியிலிருந்து விடுவிக்கின்றார்கள். எந்த பிராணியும் தனக்கு ஆபத்து வரும்போது, தன்னைக் காத்துகொள்வதற்காக எதிர்த்து போராடும் குணம் படைத்தவை என்பதை அந்த ஆராய்ச்சியின் முடிவிலே அவர்கள் விளக்குகின்றார்கள். ஒரு சிறு பிராணியே தனக்கு ஆபத்து வரும் போது எதிர்த்து போரடுகின்றது என்றால், தேவ மனிதர்களாகிய நாமும் போராட வேண்டுமல்லவா?

பிரியமானவர்களே! எமது போராட்டமே எம்மை கிறிஸ்துவுக்குள் தேறின நிலையை அடையச் செய்யும். எமது போராட்டத்திலே நாம் தொற்றுத் தோற்றுப் போகலாம். சோர்ந்து போக வேண்டாம். என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு. பிலி 4:13 என்ற வசனத்தின்படி அவருடைய பலத்துடன் மீண்டும் மீண்டும் எழும்புவோம், போராடுவோம்.

ஆகவே அன்பானவர்களே, நம்மைச் சற்று சிந்தித்துப் பார்ப்போம். ஒரு போலியான வளர்ச்சியை வைத்துக்கொண்டு. நம்மை நாமே ஏமாற்றுகின்றோமா? அப்படியானால் தயவாய் எது மெய்யான வளர்ச்சியோ அதைத் தேடி நாடி ஓடுவோம்.

*நீ கிறிஸ்துவுக்குள் வளர்ந்தால் – உன் குடும்பம் வளரும்*
*உன் குடும்பம் வளர்ந்தால் – உன் சபை வளரும்*
*உன் சபை வளர்ந்தால் – தேவ இராஜ்யம் வளரும்*

**உங்கள் அனைவருக்கும் கிருபையும், சமாதானமும் பெருகுவதாக!**

**ஒகஸ்டின் போல்**
**(ஆசிரியர்)**



# நீங்க நல்லா இருப்பீங்க ...

(ஆசீர்வாதம் – ஒரு வேதாகமக் கண்ணோட்டம்)

## நித்தியத்தை நோக்கிய ஆசீர்வாதம்

கடந்த இதழின் தொடர்ச்சி...

அத்துடன் புதிய ஏற்பாடானது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை மையப்படுத்தியே நகர்கிறது. இதில் வரப்போகிற அவருடைய இராஜ்ஜியத்தின் ஆசீர்வாதமே முக்கியமானதாக வாக்குக்கொடுக்கப்படுகிறது. ஆண்டவர் இயேசு கிறிஸ்து தம்முடையவர்களுக்கான ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணிவிட்டு, பின்னர் அவர்களை வந்து கூட்டிச்செல்வதாக வாக்குக் கொடுக்கிறார். (யோவான் 14:2).

அவருடைய இராஜ்ஜியம் வரப்போகிறது என்றால் இப்போது இருக்கும் உலகம் தற்காலிகமானது. நித்திய தேவன் ஒருபோதும் அழிந்து போகிற அநித்தியமான, மாயையான, பொய்யான ஒன்றை வாக்குக்கொடுக்கவேமாட்டார்.

*“பொய்யுரையாத தேவன் ஆதிகாலமுதல் நித்திய ஜீவனைக் குறித்து வாக்குத்தத்தம்பண்ணி” (தீத்து1:3), “நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்கு செய்த வாக்குத்தத்தம்” (1யோவான் 2:25).*

எனவே புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்கள் நித்தியத்திற்கு உரியதையே எதிர்ப்பார்த்திருந்தனர். ஆண்டவர் இயேசு கிறிஸ்து சீக்கிரமாய் வந்து அவர்களை கூட்டிக்கொண்டு போய்விடுவார் என ஆவலுடன் சீக்கிரம் வரப்போகும் **“மார நாதா”** வுக்காகக் காத்திருந்தனர்.

மேலும் வேதம் கூறுகிறது: “நீங்கள் உலகத்தாரல்ல” (யோவான் 15:19) “நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது” (பிலி. 3:20), “நித்திய வீடு பரலோகத்தில் நமக்கு உண்டு” (2கொரி 5:1), “காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு...” (2 கொரி 4:17). “புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருந்தனர்” (2 பேதுரு 3:13). எனவே புதிய ஏற்பாடானது வரப்போகிற ஆசீர்வாதத்திற்கு ஏதுவாய் சீஷர்களை நகர்த்துகிறது.

### உலகமும் அதன் உடமையும்

உலகம், இப்பிரபஞ்சம், பூமி எனும் சொல்லானது புதிய ஏற்பாட்டிலே வெறுமனே நிலத்தை அல்லது இடத்தை குறிப்பிடாமல் அதனை ஒரு அடிமைத்தன அல்லது மறுபடியும் பிறந்தவர்களுக்குரிய ஒரு போராட்ட களமாகவே வர்ணிக்கிறது. உலகத்தில் உள்ள மறுபடியும் பிறவாதவர்கள் உட்பட, உலகத்திலுள்ள உடமைகளும் மெய் கிறிஸ்தவனுக்கு ஒரு சவாலாகவே உள்ளது என்பதை புதிய ஏற்பாடு போதிக்கிறது. “இந்த உலகத்தின் அதிபதி என்னிடத்தில் வருகிறான் அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை. என ஆண்டவர் இயேசு கிறிஸ்து கூறுகிறார்” (யோவான் 14:30).

இவ்வுலகமானது சபிக்கப்பட்ட நிலையிலே உள்ளதாக வேதம் கூறுவதுடன், சீஷர்கள் இவ்வுலகத்திற்கு உரியவர்கள் அல்ல, அவர்கள் இவ்வுலகத்திற்கு அந்நியர், பரதேசிகள் (1பேதுரு2:11), உலகம் எனக்கு சிலுவையிலறையுண்டிருக்கிறது (கலாத்தியர் 6:14). மேலும் இது பொல்லாத பிரபஞ்சம் (கலாத்தியர் 1:4) அநித்தியமான பாவ சந்தோஷம் (எபிரெயர் 11:25), உலகப்பொருளுக்கான ஊழியம் தேவனுக்கு எதிரானது (லூக்கா 16:13), உலகத்தார் எனும் பிரிவே தேவனுடையவர்கள் அல்ல எனக் காட்டுகிறது.
(லூக்கா 12:30), உலகத்திலிருந்து ஒன்றும் கொண்டுபோக முடியாது (1 தீமோத்தேயு 6:7), உலக சிநேகிதம் தேவனுக்கு விரோதமான பகை (யாக். 4:4), உலகத்தில் அன்பு கூர்ந்தால் தேவ அன்பு இல்லை (1 யோவான் 2:15), உலகம் கிறிஸ்தவனுக்கு ஒரு போராட்டகளம் (1 யோவான் 5:4). என பல்வேறு வசனங்கள்

உலகத்தையும் அதனுடைய உடமைகளையும் கிறிஸ்தவனுக்கு எதிராகவே காட்டுகிறது.

எனவே புதிய ஏற்பாட்டில் உலகம் என்பது ஒரு கிறிஸ்தவன் ஆவிக்குரிய வெற்றியை நோக்கி எதிர்த்து போராடி கடந்து போக வேண்டிய ஒரு இடமாக பல இடங்களில் வர்ணிக்கிறது. எதிராளியான பிசாசானவன் மெய்விசுவாசிகளுக்கு எதிராக வைத்திருக்கும் பெரிய ஆயுதமே உலகமும் அதிலுள்ள உடமைகளுமே.

இவைகள் எதனை உண்டுபண்ணுகிறது என்றால் - மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை. இந்த உலகத்தையும் அதன் உடமைகளையும் அதிகமாய் நேசிப்பவர்களிடம் “பிதாவினுடைய அன்பு இல்லை” (1யோவான் 2:15) என வேதம் கூறுகிறது.

அத்துடன் இந்த உலகத்தையும் அதிலுள்ள அனைத்தையும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவும், அவருடைய சீஷர்களும் அநித்தியமான, அழிந்து போகிற ஒன்றாகவே விபரிக்கிறார்கள். “பூமியிலே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்” (மத்தேயு 6:19). “இப்போதே இந்த உலகத்திற்கு நியாயத்தீர்ப்பு உண்டாகிறது” (யோவான் 12:31) “பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்” (2 பேதுரு 3:13) “பூமிக்குரிய கூடாரம் அழிந்து போகும்” (2 கொரி. 5:1) “உலகமும் அதன் இச்சையும் ஒழிந்துபோம்” (1 யோவான் 2:17).

மேலும் புதிய ஏற்பாடானது ஒருபோதும் செல்வமுடமையே தேவாசீர்வாதம் என எந்த இடத்திலும் கற்றுக்கொடுக்கவுமில்லை, வாக்குக்கொடுக்கவுமில்லை. புதிய ஏற்பாடு வரப்போகிற ஜீவனையே வாக்குக்கொடுக்கிறது. (ரோமர் 6:22) அத்துடன் பணத்தை, ஐசுவரியத்தை, ஐசுவரியவான்களை புதிய ஏற்பாடானது ஆபத்தில் விழக்கூடிய நிலையிலேயே விபரிக்கிறது.

“ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும், கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும், அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும், சேதமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். பண ஆசை எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனைகளாலே

தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள்" (1தீமோத்தேயு 6:9-10).

### பணமா பகை?

இதனை நன்றாக விளங்கிக் கொள்ளுங்கள்: ஆண்டவர் இயேசு கிறிஸ்து ஒரு போதும் எந்த ஒரு தனிப்பட்ட நபரையும் வெறுத்ததில்லை. ஆனால் அந்த நபரின் பின்னணியத்தில் கிரியைசெய்யும் அதிகாரம், படிப்பினை, கொள்கை, கோட்பாடு, ஆளுமை, பிசாசின் தந்திரங்கள் இவைகளையே எதிர்க்கிறார். அதாவது மிக இலகுவாக கூறினால் ஆண்டவர் இயேசு கிறிஸ்து ஐசுவரியவான்களை வெறுக்கிறவரோ அவர்களுக்கு எதிரானவரோ அல்ல.

அவருடைய சீஷன் லேவி ஒரு ஆயக்காரன், மத்தேயு ஒரு ஆயக்காரன் அதாவது வரி வசூழிப்பவன், ஆயக்காரர் அக்காலத்திலிருந்த ஒருவகை ஐசுவரியவான்கள், சகேயு ஒரு ஆயக்காரன். ஒரு ஐசுவரியவான், இயேசுவின் உடலை எடுத்த அவரது சீஷன் யோசேப்பும் ஒரு ஐசுவரியவான். ஆயக்காரர் அநேகர் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை பின்பற்றினர். தேவன் நபர்களுக்கு எதிரானவர் அல்ல. ஆனால் அந்த நபருக்கு பின்புறம் செயற்படும் தத்துவமே பிரச்சினை.

தேவன் ஐசுவரியவானுக்கு எதிரானவர் அல்ல. மாறாக அந்த ஐசுவரியத்தினிமித்தம் உண்டாயிருக்கிற மமதை, அகங்காரம், பெருமை, பிடிவாதம், செல்வாக்கு, துஷ்பிரயோகம், அதிகாரம், கொள்கை ஆகியவற்றையே வெறுக்கிறார்.

### ஐசுவரியத்தின் ஆபத்து

ஏன் செழுமையை வேதம் அதிகமாக உற்சாகப்படுத்தவில்லை என்றால் அதனுடைய ஆளுமையும், ஆபத்தும் மிக பெரிதாக உள்ளது. உலக ஐசுவரியம் ஒரு மனிதனை என்ன செய்கிறதென்றால், உலகத்திலேயே அதிக திரவியசம்பண்ணாக இருந்த சாலமோன் இவ்வாறு கூறுகிறார்: "ஐசுவரியத்தையும் எனக்கு கொடாதிருப்பீராக" நான் பரிபூரணம் அடைகிறதினால் மறுதலித்து, கர்த்தர் யார் என்று சொல்லாதபடிக்கு.... (நீதி. 30:9).

தேவனுடைய இருத்தலையே கேள்வி கேட்குமளவு ஆபத்தானது. நித்தியத்தின் அறிவை

மறைக்கிறது. தனக்காக களஞ்சிய சாலையை பெரிதாக்கி கட்டிய ஐசுவரியவானை ஆண்டவர் இயேசு கிறிஸ்து மதிகேடனே, முட்டாளே என்கிறார் (மத்தேயு 12:20).

அத்துடன் செல்வப் பெருக்குள்ளோரும், பணம்படைத்தவர்களும் ஒரு வகையில் சபிக்கப்பட்டவர்களாகவே புதிய ஏற்பாட்டு காலத்தில் என்னப்பட்டார்களாகக் காண்கிறோம்.

“ஐசுவரியவான்களுக்கு ஐயோ” (லூக்கா 6:24). ஏனெனில் புதிய ஏற்பாட்டுக்காலத்தில் யூதர்கள் ரோம பேரரசில் அடிமைகளாக இருந்த வேளையில் ஒரு சில யூதர்கள் மட்டுமே பணக்காரர்களாக இருந்தனர். அவர்கள் அரச சலுகை, அதிகாரங்கள் பெற்றவர்களாக இருந்தனர். ஆயினும் அவர்கள் அவர்களுக்குள்ளேயே இருந்த ஏழைகளை ஒடுக்கினர். அத்துடன் அவர்கள் அதிகாரமுடையவர்களாகவும், பெருமையுடையவர்களாகவும் இருந்தனர். தரித்திரரை தரக்குறைவாகவே எண்ணி நகையாடினர்.

“நீதிமான்களை நீங்கள் அதிக ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்துக் கொலை செய்தீர்கள்” (யாக்கோபு 5:6)

அத்துடன் ஐசுவரியவான்கள் தங்களுடைய பொக்கிஷ த்தை அழிந்து போகும் இவ்வுலகத்திலேயே சேகரித்தனர். அவர்களுக்கு மறுமையைக்குறித்த யோசனை, பயம் இருக்கவில்லை. பல இடங்களில் ஆண்டவர் இயேசு கிறிஸ்து ஐசுவரிய மோகத்தை ஒரு ஆபத்தாகவே காட்டுகிறார். ஆண்டவர் இயேசு கிறிஸ்து கூறிய பல உவமைகளில் ஐசுவரியவான்களை ஒரு எதிர்மறையான கண்ணோட்டத்திலும், ஐசுவரியமும், உடமைகளும் தேவராஜ்யத்திற்கு ஒரு சவாலாக உள்ளதையே காண்பிக்கிறார்.

“ஐசுவரியவான் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பது அரிதென்றும்” கூறுகிறார் (மத்தேயு 19:23). பரலோக இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க அச்சுறுத்தலாக உள்ள ஐசுவரியம் உண்மையாகவே ஒரு ஆசீர்வாதமா?

இதில் மிக சுவாரசியம் என்னவென்றால், ஐசுவரியவான், லாசரு என்பவர்களுடைய உவமையிலே (லூக்கா 16:20) தரித்திரனுக்கு பெயர் வழங்கப்படுகிறது - லாசரு. ஆனால் ஐசுவரியவானுக்கு ஆண்டவர் இயேசு கிறிஸ்து வேண்டுமென்றே பெயர் சூட்டவில்லை. ஒருவருடைய பெயர் முக்கியத்துவப்படுத்தவில்லை என்றால் அந்த நபர் முக்கியமில்லாதவர் அல்லது கணக்கில் கொள்ளப்படாதவர் என்றே அர்த்தம். உதாரணமாக சிலரது பெயர்களைக் கூறிக்கொண்டு வந்து திடீரென So & So என ஆங்கிலத்தில் கூறுவதுண்டு. அதாவது அவ்வளவு முக்கியமில்லாதவர்.

அக்காலத்தில் ஐசுவரியமுள்ளவர்கள் சமுதாயத்திலே மிக முக்கியமான நபர்களாக வரவேற்கப்பட்டு முதலிடம் கொடுக்கப்பட்டார்கள். ஆனால் ஆண்டவர் இயேசு கிறிஸ்து இவ்வுலக ஆஸ்தியில் நம்பிக்கை வைக்கும் ஐசுவரியவான்களை ஒரு எதிர்மறையான உதாரணமாகவும், சபிக்கப்பட்டவர்களாகவும், முட்டாள்கள் என அழைத்து முக்கியமற்றவர்கள் என காண்பிக்கிறார்.

## உடமையை வெறுப்பவனே பாக்கியவான்

எனவே புதிய ஏற்பாடு எதனை ஆசீர்வாதமாக கற்றுக்கொடுக்கிறது? தன்னையும் தனது உடமைகளையும் வெறுக்கிறவனை ஆண்டவர் இயேசு கிறிஸ்து பாக்கியவான் அல்லது ஆசீர்வதிக்கப்பட்டவன் என்கிறார். “என் நாமத்தினிமித்தம் வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனோ அவன் நூறத்தனையாய் அடைந்து, நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக்கொள்வான்” (மத்தேயு 19:29). இது எதனைக் காண்பிக்கிறது என்றால், தனது ஜீவனுக்காக உலகப்பொருளை அல்ல, தேவனையே முழுமையாக நம்பியிருப்பவன் ஆசீர்வதிக்கப்பட்டவன்.

தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல (மத்தேயு 10:38). சிலுவையை எடுத்தல் என்பது மரணத்தை விரும்புதல். இது உலக பார்வையில் ஒரு ஆசீர்வாதமான வாழ்க்கை அல்ல. ஆசீர்வாதமில்லாத வாழ்வே ஆசீர்வாதம். ஒருபோதும் ஆண்டவர் இயேசு கிறிஸ்து ஐசுவரியவானைப் பார்த்து பாக்கியவான் எனக் கூறவில்லை. மாறாக தன்னைத் தானே வெறுப்பவர்கள், அவருக்காக உடமைகளைத் துறப்பவர்கள், தனது ஜீவனையும் துட்சமாக நினைப்பவர்கள். இவர்களையே பாக்கியவான்களாக கூறுகிறார் (மத்தேயு 5). தனக்குறியவைகளை இழப்பதே ஆசீர்வாதமாகவும் காட்டுகிறது. (மத்தேயு 19:29, மாற்கு 10:30)

சில போதகர்கள் யோவான் 10:10ஐ சுட்டிக்காட்டி இயேசு எமக்கு பரிபூரண வாழ்வைக் கொடுக்க வந்தார் என்கின்றனர். ஆனால் ஆண்டவர் இயேசு கிறிஸ்து ஒருபோதும் இவ்வுலகத்தில் நாம் பரிபூரணமாக வாழ முடியும் என கற்றுக்கொடுக்கவேயில்லை. மாறாக மரணத்திற்குரிய பாவ மனிதனின் பரிபூரணம் அவனுடைய நித்தியத்திலேயே உள்ளது. இச்சபிக்கப்பட்ட உலகத்திலே ஒருவனும் பரிபூரணமாக வாழ முடியாது. அப்படியென்றால் அவன் இவ்வுலகில் சாவாமையையே தரித்துக்கொள்ள வேண்டும். யோவான் 10இல் ஆண்டவர் இயேசு கிறிஸ்து நித்திய ஜீவனுக்கான வழியையே காட்டுகிறார்.

என்னுடைய கேள்வி உண்மையாகவே ஆண்டவர் இயேசு கிறிஸ்துவும் அவருடைய சீஷர்களும் சுகபோகமாக, செழுமையுடன், ஐசுவரியவான்களாக, திரவியசம்பண்ணர்களாக வாழ்ந்தனரா? ஒருவரும் இல்லையே. யோவானைத் தவிர மற்றவர்கள் இரத்தசாட்சியாகவே மரித்தார்கள்.

“அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்” (2 தீமோத்தேயு 3:12) என வேதம் கூறுகிறது. மனதாயிருந்தாலே துன்பப்படுவார்கள் என்றால், வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தினால் நிலைமை இன்னும் மோசமாக அல்லவா இருக்கும். இது வெறுமனே

அப்போஸ்தலராக அழைக்கப்பட்ட சீஷருக்கு மட்டுமல்ல. ஆண்டவர் இயேசு கிறிஸ்துவால் அழைக்கப்பட்ட யாவருக்கும் உரியது. இயேசு இவ்வுலகில் பாடுபடுகின்ற தாசனாகவும், அவரைப் பின்பற்றுகிறவன் பாடுபடுகின்ற சீஷனாகவும் இருக்கிறான்.

## பகிர்ந்து கொள்ளுதலே ஆசீர்வாதம்

அத்துடன் புதிய ஏற்பாடானது சேர்த்து வைத்தலை அல்ல, பகிர்ந்து கொள்ளுதலையே ஆசீர்வாதமாக காட்டுகிறது. இதற்கு ஒரு சிறந்த உதாரணம் தான் மத்தேயு 25:34-36: “ராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தை சுதந்தரித்துக்கொள்ளுங்கள்” என்கிறார். உண்மையாக வேதம் இங்கு யாரை ஆசீர்வதிக்கப்பட்வர்கள் என்கிறது? பசிக்கு போஜனம் கொடுத்து, தாகத்திற்கு தண்ணீர் கொடுத்து, அந்நியனை சேர்த்து, வஸ்திரம் கொடுத்து, வியாதியஸ்தனை விசாரித்து, கட்டுண்டவனைப் பார்க்க வந்தவன் என தனக்குரியதைப் பகிர்ந்து கொண்டவனையே தேவன் ஆசீர்வதிக்கப்பட்டவன் என்கிறார். அத்துடன் பிசினித்தனம் பண்ணினவனை சபிக்கப்பட்டவன் என்கிறார் (மத்தேயு 25:41).

இதற்கு இன்னும் ஒரு சிறந்த உதாரணம் தான் புதிய ஏற்பாட்டு திருச்சபை. அப்போஸ்தலர் 4:32-35, தனக்குள்ளவைகள் ஒன்றையும் தன்னுடையவை என கூறவில்லை, சகலமும் பொதுவாக இருந்தது, அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை. பகிர்ந்து கொள்ளுதல் ஆதி அன்பின் ஒரு தனித்துவமான அடையாளமாக இருந்தது. நிலங்களையும், வீடுகளையும், தங்களுக்குரிய அனைத்தையும் அவர்கள் விற்றுப் பகிர்ந்தனர்.

தேவனுடைய வருகையை மையமாகக் கொண்டு அதற்கு அயத்தமான ஒரு வாழ்வு. இதில் சிறந்த விடயம் என்னவென்றால் அப்போஸ்தலர் ஒருவரும் தமது வாயைத்திறந்து ஒன்றையும் கேட்கவில்லை. ஆனால் இன்றைய மேடை நாடக போதகர்களோ...? அத்துடன் உலகத்தையும் அதன் உடமைகளையும்

ஆதாயப்படுத்துவது ஒரு மெய்க் கிறிஸ்தவனின் நோக்கமல்ல, மாறாக அழிந்து போகும் இந்த உலக பொருள்களால் சிநேகிதரை ஆதாயப்படுத்துவதே மிக முக்கியம். "நீங்கள் மாளும் போது உங்களை நித்தியமான வீடுகளிலே ஏற்றுக்கொள்வார் உண்டாகும்படி, அநீதியான உலகப் பொருள்களால் உங்களுக்கு சிநேகிதரைச் சம்பாதியுங்கள்" (லூக்கா 16:9)

## துயரத்தை ஏற்பதே ஆசீர்வாதம்

மேலும் ஆசீர்வாதம் என்பது துன்பம் துயரமற்ற ஒரு நிம்மதியான நிலை அல்ல, மாறாக தேவனுக்காக, அவரது ஜனங்களுக்காக துயரத்தை ஏற்பதே ஆசீர்வாதம். வேதாகமத்தில் தேவன் தமது ஜனங்களை பிறருக்காக வாழும் ஒரு சமூகமாகவே உருவாக்குகிறார். பழைய ஏற்பாடாயிருந்தாலும் இஸ்ரவேலுக்குள்ளே அவர்கள் தேவனுக்கு சொந்தமாக இருந்து, அவரே மெய்யான தேவன் என்பதற்கு இவர்கள் உலகத்திற்கு சாட்சிகள்.

"நானே தேவன் என்பதற்கு நீங்கள் எனக்கு சாட்சிகள்" (ஏசாயா 43:12). புதிய ஏற்பாட்டில் உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவுக்கு சாட்சிகள். (அப்போஸ்தலர்1:8). இந்த ஜனம் தமது விசுவாசத்தையும், தேவனுடைய செய்கையின் மகிமையையும், அவருடைய ஆசீர்வாதத்தின் ஐசுவரியத்தையும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வது மட்டுமல்ல அவர்களுடைய துயரத்தையும் ஏற்றுக் கொள்ளும்படிக்கு அழைக்கப்பட்ட ஜனம். இராஜரீகமான ஆசாரியக்கூட்டம் என்பதற்கான அர்த்தமே அதுதான்.

தேவனுக்கு எதிராக செயற்படும் உலகத்திற்கும் அதனுடைய இச்சைக்கும் எதிராக போராடி, அதினிமித்தம் வரும் துன்பத்தை மகிழ்ச்சியுடன் ஏற்றனர். அத்துடன் மற்றவர்களுடைய இரட்சிப்புக்காக, அந்த செய்தியைக் கொண்டு செல்வதற்காக சீஷர்கள் தங்களுடைய ஜீவனையே துட்சமாக எண்ணி, மற்றவர்களுக்காக தயக்கமில்லாமல், பாடுகளையே அனுபவித்தனர். இதனையே அவர்களுடைய மகிழ்ச்சியும், ஆசீர்வாதமுமாய் இருக்கிறது என மகிழ்ந்தனர்.

*தொடரும் ...*

**போதகர். த. அஜேந்திரன்.**
**(ஹட்டன்)**

# அவருடைய சத்தம்



இயேசுவின் சீஷர்களாய் பண ஆசைக்கு விலகியிருக்கக் கடவோம்!

கர்த்தருடைய ஆவி தங்கியிருந்த தீர்க்கதரிசி பிலேயாம் (எண். 24:2, 3) வழிதப்பிப் போனது பண விஷயத்தில்!! அநீதியாய் நடந்து கொண்டதினால் அல்ல! மாறாக, பணத்தை நேசித்தபடியால்!! பணத்தின்மேலும் மண்ணுக்குரிய ஒரு ராஜாவினால் கிடைக்கும் கனத்திலும் அவன் கொண்ட மோகம், தான் தேவசித்தத்திற்கு விரோதமாய் செல்வதைக்கூட காணக்கூடாதபடிக்கு பிலேயாமின் கண்களைக் குருடாக்கியது!

தேவன் அவனுடைய இருதயத்தில் என்ன இருக்கிறது என்பதை காணும்படியே அவனைச் சோதித்தார்!!

ஆரம்பத்தில் பிலேயாம் தேவசித்தத்தை நாடினபோது, “பாலாக்கு ராஜாவிடம் போக வேண்டாம்” எனத் தெளிவான பதிலை தேவன் அளித்திருந்தார். ஆனால் பாலாக்கு, அதிக பணத்தையும், மரியாதையையும் அளித்தபோது பிலேயாம் இழுப்புண்டு, மீண்டுமாய் பாலாக்கிடம் செல்லும்படி தேவனிடம் அனுமதி கேட்டான். தேவன் அவனுடைய வேண்டுதலைத் தந்தருளி, அவன் ஆத்துமாவிலோ இளைப்பை அனுப்பினார் (சங்.106:15). தான் இப்போது சோதிக்கப்பட்டதையும், பணமோகம் தன்னை வழிதவறப் பண்ணியதையும் அவன் உணரவில்லை!

பண ஆசையே எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. தேவன் நமது உண்மையையும், தேவ பக்தியையும் சோதிக்கும்படியே உலகப் பொருட்களை கவர்ச்சிகரமாகச்

*25ம் பக்கத்தைப் பார்க்கவும்...*










பெண்கள் சங்க கருத்தரங்கு பாலம் கோட்டை திருச்சபை பொரனுவையில் 17-05-2024 அன்று நடந்தது. 25க்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்

தலைப்பு

இன்றைய காலத்தில் குடும்பவாழ்வில் பெற்றோரின் பொறுப்பும் /குழந்தை வளர்ப்பும்.








கடந்த **21-04-2024** அன்று CRC மாளிகாகந்த ஆலயத்தின் 135வது ஆண்டு நிறைவு ஆராதனை மாளிகாகந்த ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது.
















கடந்த **21-04-2024** அன்று CRC மாளிகாகந்த ஆலயத்தின் 135வது ஆண்டு நிறைவு ஆராதனை மாளிகாகந்த ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது.









29.03.2024 அன்று CRC பாலம்கோட்டை திருச்சபையில் ஞானஸ்நானம் மற்றும் பகிரங்க விசுவாச அறிக்கை செய்தோர் விபரம் :



ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டோர் : R.நிர்மலாகுமாரி, Y.யோசியா, R.தாஸ், K. புவனேஸ்வரி, B.அஷாத், M. பிரகாஷ்



பகிரங்க விசுவாச அறிக்கை : S.சுஜிவா, N. ருவாந்தி, K. செல்வநாயகம்

செய்திருக்கிறார். தமது சீஷர்கள் உலகப்பொருட்களை தேடி நாட வேண்டும் என இயேசு கிறிஸ்து விரும்பவில்லை. நாம் தேவனுடைய இராஜ்யத்தையும் அதன் நீதியையும் முதலாவது தேடும்படியே அழைக்கப் பட்டிருக்கிறோம். அப்பொழுது நமது எல்லா உலகத் தேவைகளும் நிறைவாய் நம் மடியில் வந்து விழும்! நமது தேவைகளை மனிதரிடம் சொல்லி யாசித்து கேட்பதினாலோ, வேண்டுவதினாலோ அல்லது மறைவாக அறிவித்து உணர்த்துவதனாலோ நமது உலகத் தேவைகள் சந்திக்கப்படப் போவதில்லை! மாறாக, தேவனை மட்டுமே நம்புவதால் மாத்திரமே சந்திக்கப்படும்! கர்த்தரிடத்திலிருந்து வரும் ஆசீர்வாதத்தினால் நமது உலக தேவைகள் எல்லாம் சந்திக்கப்பட்டிருக்கும். அதனோடு எவ்விதமான வேதனையும் வராது (நீதி. 10:22, பிலி. 4:19).

## ஜெபம்:

பரம தகப்பனே! உம்முடைய
வழியில் நடப்பதிலிருந்து
எங்களைப் பிரித்திடும்
எதிரியாக **“பண ஆசையை”**
உணர்த்தியமைக்கு நன்றி!
விழிப்புடன் ஜீவித்திட கிருபை
தாரும்! இயேசுவின் நாமத்தில்,
ஆமென்.

**போதகர். ஜோசப் ஜெயசீலன்**

| ஆலயம் | ஞாயிறு ஆராதனை | ஓய்வுநாள் பள்ளி |
|---|---|---|
| **வூல்வெண்டால்** – போதகர். ரிக்சன் - 077 2226217 | மு.ப. 8.00 | மு.ப. 9.45 |
| **ரீஜன்ட் வீதி** – போதகர். சசிகுமார் - 0777 101558 | மு.ப. 8.00 | மு.ப. 10.00 |
| **தெஹிவளை** – அருட்திரு. நெல்சன் -077 3674828 | மு.ப. 10.00 | மு.ப. 8.30 |
| **கொஹுவலை** – போதகர். ஒகஸ்டின் -0777 045994 | மு.ப. 7.00 | மு.ப. 8.30 |
| **மாளிகாகந்த** – போதகர். ஒகஸ்டின் -0777 045994 | மு.ப. 8.00 | மு.ப. 9.45 |
| **வெள்ளவத்தை** – போதகர். சுரேஷ் -076 8747472 | மு.ப. 8.00 | மு.ப. 9.45 |
| **வத்தளை** – போதகர். ரிக்சன் - 077 2226217 | மு.ப. 9.00 | மு.ப. 11.00 |
| **உலப்பனை** – போதகர். கோமஸ் - 0777 138976 | மு.ப. 9.30 | பி.ப. 4.00 |
| **இறக்குவானை** – போதகர். என்டன் -076 6788763 | மு.ப. 10.00 | மு.ப. 8.45 |
| **கஹாவத்தை** – போதகர். என்டன் - 076 6788763 | பி.ப. 5.00 | பி.ப. 4.00 |
| **ஹட்டன்** – போதகர். அஜேந்திரன் - 076 8000748 | மு.ப. 10.00 | மு.ப. 11.45 |

# சார்லஸ் தியோபிலஸ் எவால்ட் ரீனியஸ்




## இரத்த சரித்திரம்

(இரத்த சாட்சிகளின் இரத்தம் சபையின் வித்து)



## (Charles Theophilus Ewald Rhenius)

(1832 - 1905)

ரீனியஸ் 1790 ஆம் ஆண்டு நவம்பர் 5ம் திகதி ஜெர்மனியில் உள்ள புரசியாவில் உள்ள கிராடென்ஸ் என்ற இடத்தில் பிறந்தார். அவரது தந்தை நிக்கோலஸ் ரீனியஸ் பிரஷ்ய அவர் இராணுவத்தில் பணிபுரிந்தார். அவரது தாயார் டோரோதியா ஸ்கீமன். ரீனியஸ்க்கு ஆறு வயதாக இருக்கும்போது அவரது தந்தை இறந்துவிட்டாார். அவருக்கு இரண்டு சகோதரிகள் மற்றும் இரண்டு சகோதரர்கள் இருந்தனர்.

ரீனியஸ் தனது 14 வயது வரை மரியன்வெர்டரில் உள்ள கதீட்ரல் பள்ளியில் படித்தார், அதன் பிறகு பாஸ்காவில் தனது மாமாவின் கீழ் மூன்று ஆண்டுகள் எழுத்தாளராக பணியாற்றினார். 1807 ஆம் ஆண்டு அவர் தனது பெரியப்பாவின் நிலத்தை மேற்பார்வை செய்வதில் பணியாற்றினார். இந்தக் காலகட்டத்தில் ரீனியஸ் கிறிஸ்தவப் பணிகளில் ஆர்வம் காட்டினார். அவர் பெர்லினுக்குச் சென்று 15 மாதங்கள் இறையியல் கல்வி கற்று, 1812 இல் போதகராக திருநிலைப்படுத்தப்பட்டார்.

சீர்திருத்தத் திருச்சபையைச் சேர்ந்த இவர் 1814ஆம் ஆண்டு, ஜூலை 4ம் திகதி சர்ச் மிஷன் சங்கம் (CMS) சார்பில் இந்தியாவுக்கு ஊழியராய் வந்தார். இந்தியா வந்த இவர் தரங்கம்பாடியில் சிறிது காலம் தங்கி தமிழ் பயின்றார். பின்பு சென்னை சென்றார். அங்கு அன்னி வேன் சாமரன் (Annie Van Someran) என்ற ஒல்லாந்த நாட்டுப் பெண்ணைத் திருமணம்

செய்து கொண்டார். அங்கு தமிழ், தெலுங்கு மொழிகளைக் கற்றார். சீர்திருத்த போதகர்கள் ஆங்கிலிக்கன் திருச்சபையை அனுசரித்துப் போக வேண்டும் என்று பொதுவாக எதிர்பார்க்கப்பட்டது. ரீனியஸால் அது இயலவில்லை. எனவே சென்னையிலிருந்து திருநெல்வேலிக்கு மாற்றம் செய்யப்பட்டார். 1820 ஆம் ஆண்டு ஜூலை 7ம் திகதி முதல் திருநெல்வேலியில் 18 ஆண்டுகள் பணியாற்றினார்.

திருநெல்வேலிக்குத் தஞ்சாவூரிலிருந்து வந்த முதல் பாதிரியார் (1786-1805) வேளாளர் சமூகத்தைச் சேர்ந்தவர். இவர் திருநெல்வேலி சபையிலும் சாதிமதப் பழக்கங்களை அனுமதித்திருந்தார். ஆனால் ரீனியஸ் இந்தப் பாகுபாடுகளை அனுமதிக்கவில்லை. பள்ளி, ஆலயம், மாணவர் தங்கும் விடுதிகளிலும் அனைத்து மாணவர்களும் சரிசமமாக நடத்தப்படல் வேண்டும் என்பதில் மிகவும் கண்டிப்பாக இருந்தார். மேலும் தமிழிலேயே பாடங்கள் கற்பிக்கப்பட வேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டிருந்தார். அதனால் மாணவர்களுக்கான பாட நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தார். பல பாடசாலைகளைத் தோற்றுவித்தார். அதுபோல் ஆண்களைப் போல் பெண்களுக்கும் கல்வி வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் பெண்களுக்கும் பாடசாலைகளை உருவாக்கினார். வேளாளரை மட்டுமின்றி, முதன் முறையாக நாடார்களை ஆசிரியர்களாகவும், உபதேசியார்களாகவும் நியமிக்கத் தொடங்கினார். அதனால் ரீனியஸ் அநேக தொல்லைகளுக்கு ஆளாக நேரிட்டது.

திருநெல்வேலி மாவட்டத்தில் கிறிஸ்தவ சமயப் பணியில் இவர் ஆற்றிய தொண்டு அளவிடற்கரியது. இதனால் இவரை திருநெல்வேலி அப்போஸ்தலர் (The Apostle of Tirunelveli) என்று அழைக்கப்பட்டார். அவர் திருநெல்வேலி பகுதியில் 371 கிறிஸ்தவ சபைகளை நிறுவினார். திருநெல்வேலி, பாளையங்கோட்டை, முருகன்குறிச்சியில், கதீட்ரல் ஆலயம் (Cathedral Church) இருக்கும் இடத்தில் 1826 முதன் முதலில் ஒரு சிறு ஆலயத்தைப் பொது மக்கள் வழிபாட்டிற்காகக் கட்டினார். அது இன்று தூய திரித்துவப் பேராலயம் எனப்படும் ஊசிக்கோபுரம் (Holy Trinity Cathedral) கேச் சிறப்பு பெற்றுள்ளது. இதன் அருகில் பெண்களுக்கென்று ஒரு

பள்ளிக்கூடத்தை நிறுவினார். அது இன்று மேரி சார்ஜெண்ட் மேல் நிலைப் பள்ளியாக உயர்ந்துள்ளது. அதுபோல் உபதேசியார்களுக்கும், ஆசிரியர்களுக்கும் கற்பதற்கு ஒரு போதனாப் பள்ளியைத் தொடங்கினார். அது இன்று பிஷப் சார்ஜெண்ட் போதனாப் பள்ளி எனும் பெயரில் அமைந்துள்ளது.

சமூக அநீதிகளால் விளைந்த துயரங்களைப் பொறுத்துக்கொள்ள இயலாமல் தாழ்த்தப்பட்ட ஜாதியினர் வேகமாகக் கிறிஸ்தவத்தை தழுவியதாக ரீனியஸ் கருதினார் என போல் அப்பாசாமி அவருடைய திருநெல்வேலி திருச்சபை வரலாற்றில் குறிப்பிடுகிறார். உயர் ஜாதியினரால் இழைக்கப்படும் கொடுமைகளிலிருந்து புதிதாக மதம் மாறிய கிறிஸ்தவர்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகப் பல கிறிஸ்தவ கிராமங்கள் ரீனியஸ் காலத்தில் அமைக்கப்பட்டன. அவற்றில் சில நல்லூர், மெய்யூர், சமாதானபுர, முதலூர், அடைக்கலாபுரம், கடாட்சபுரம், சத்தியநகரம், கிருபாபுரம், அன்பின் நகரம்,நாயினூர், விசுவாசபுரம், சந்தோஷபுரம், ஆசீர்வாதப்புரம், அனுக்கிரகபுரம், சீயோன் மலை, போன்றவை குறிப்பிடத்தக்கவைகள். 1827ல் புலியூர்க்குறிச்சி எனும் கிராமத்தை ஜெர்மனியிலிருந்த “டோனா பிரபு” என்பவரின் நிதியுதவியோடு ரீனியஸ் விலைக்கு வாங்கி அங்கு கிறிஸ்தவர்களைக் குடியேற்றினார். அந்த ஊர் “டோனாவூர்” என்று பெயர் பெற்றது.

ரீனியஸ் சென்னையிலிருந்த போது 1818ல் “துண்டுப் பிரசுரம் மற்றும் சமய நூல்கள் சங்கம்” (Madras Tract and Religious Book Society) என்ற நிறுவனத்தைத் தொடங்கினார். இந்த அமைப்பு பின்னாளில் “கிறிஸ்தவ இலக்கிய சங்கத்துடன்” (Christian Literary Society) இணைக்கப்பட்டு விட்டது. திருநெல்வேலியிலும் “துண்டுப் பிரசுர சங்கத்தை நிறுவினார்.” லண்டனிலிருந்து கொண்டு வரப்பட்ட தாளில், துண்டுப் பிரசுரங்களை ஆயிரக்கணக்கில் அச்சிட்டு விநியோகம் செய்தார். இதனால் கிறிஸ்தவ சமய அறிவும், சாதாரண மக்களின் எழுத்தறிவும் வளரலாயிற்று.

“தரும சங்கம்” என்ற பெயரால் ஒரு நிறுவனத்தை ஏற்படுத்தி, அதன் மூலம் பாடசாலைகள், வீடுகள், கோவில்கள் கட்டுவதற்கு நிலம் வாங்கிக் கொடுத்தார். “விதவைகளின் ஆதரிப்புச் சங்கம்” நிறுவி. அதன் மூலம் உபதேசியாரின் விதவைகளுக்கு

ஜீவனாம்சம் கொடுத்துவர ஏற்பாடு செய்தார். கிறிஸ்தவர்களாய் மாறிய சில இந்து குடும்பத்தினர் அவர்களுடைய பழக்கத்தின் காரணமாகத் தாமிரபரணி ஆற்றங்கரையில் அமைந்திருக்கும் குரங்கணி கொடைவிழாவில் கலந்து கொள்வதை தடுப்பதற்காகப் பாளையங்கோட்டையில், 1834 ஆம் ஆண்டு ஜுலை 9ம் திகதி அன்று மாம்பழச் சங்கத்தை ஆரம்பித்தார். இதன் மூலம் திருமண்டலத்தில் அனைத்து சபைகளையும் ஒருங்கிணைக்கின்ற ஸ்தோத்திரப்பண்டிகையாக வருடந்தோறும் பாளையங்கோட்டை, நூற்றாண்டு மண்டபத்தில் இன்றும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மற்றும் அலய வளர்ச்சிக்காக சபை மக்கள் ஒருநாள் காணிக்கைப் படைத்தல், ஆலய பரிபாலன நிதித் திட்டம் (Local Church Fund) கைப்பிடி அரிசி காணிக்கை போன்ற திட்டங்களை ரீனியஸ் அறிமுகப்படுத்தினார். இத்திட்டங்கள் இன்றும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.
இவர் சென்னையில் முகவை இராமானுஜக் கவிராயரிடம் தமிழ் நன்னூல் போன்ற இலக்கண நூல்களை முறையாகக் கற்றுத் தெளிந்தார். பின்பு திருப்பாற்கடல்நாதன் கவிராயர் என்னும் தமிழ் அறிஞரிடம் 14 வருடங்கள் தமிழ் இலக்கண, இலக்கியங்களைக் கற்றார். இயல்பாகவே இனிமையாகப் பேசக்கூடிய இவர் தமிழையும் சிறப்பாகப் பேசக் கூடியவரானார். இவருடைய சொற்பொழிவுகளை இந்துக்களும் இரசித்துக் கேட்டார்கள்.

பூமி சாஸ்திர நூல், பலவகைத் திருட்டாட்டம், தமிழ் இலக்கணம், வேத உதாரணத் திரட்டு, உருவக வணக்கம், மனுக்குல வரலாற்றுச் சுரக்கம், சமய சாரம், புராட்டாஸ்ட்ண்ட் - கத்தோலிக்கன். உரையாடல், சுவிசேஷ சமரசம், கிறிஸ்தவ மார்க்க நிச்சயத்துவம், தெய்வீக சாராம்சம், பூகோளம், சரித்திரம், இயற்கை, வான சாஸ்திரம், மனுக்குல வரலாறு, சூரிய மண்டலம், பிரெஞ்சு இலக்கனம், கால நூல், தாரக்கம் போன்ற பல தமிழ் நூல்களையும் பாடல்களையும் இவர் எழுதியிருக்கிறார்.
வெகுசன கிறிஸ்தவ இயக்கம் அனைத்து மக்கள் கல்வி சமுதாய நீதி குறித்த புதிய நோக்கு எளிமையான வசனத் தமிழ், மொழிபெயர்ப்புக் கலை, அச்சுப் பிரசுரத் தொடர்பு சாதனம் இவையாவும் இவருடைய தெளிந்த கோட்பாடுகளினாலும், அர்ப்பண

உழைப்பாலும் தமிழ் நாட்டில் புதிய பரிமாணங்கள் பெற்று வளரலாயின. தமிழ் இணையாக ரீனியஸ் அவரும் கருதப்படுகிறார்.

ஆரம்பத்தில் பப்ரிஷியர் என்பவருடைய தமிழ் மொழிபெயர்ப்பு வேதாகமம் அச்சடிக்கப்பட்டாலும், போதிய அளவில் பிரதிகள் சபை மக்களுக்குக் கிடைக்கவில்லை. அதிகமான பிரதிகள் தேவையென உணர்ந்த வேதாகம சங்கம் பப்ரிஷியஸ்ருடைய மொழிபெயர்ப்பையே திருத்திப் பிரசுரிக்க எண்ணங் கொண்டு அந்தப் பொறுப்பை ரீனியஸ்ரிடம் கொடுத்தது. சென்னையில் தொடங்கிய வெதாகம மொழிப்பெயர்ப்பு வேலை திருநெல்வேலியிலும் தொடர்ந்து நடைபெற்று வந்தது. அதற்கென ஒரு செயற்குழு நியமனமாகியிருந்த போதிலும், குழுவின் பிரதம மொழிபெயர்ப்பாளரான ரீனியஸ் முழு வேலையையும் செய்து வந்தார். அவர் புதிய ஏற்பாட்டை முதலில் மொழிபெயர்த்து முடித்தபின், பழைய ஏற்பாட்டில் ஆதியாகமம் தொடங்கி தானியேல் வரையும் முடித்தார். மற்ற பழைய ஏற்பாட்டு புத்தகங்களை மொழிபெயர்க்க முடியாமற் போனது ஒரு மாபெரும் இழப்பாகும். கூட்டெழுத்து முறையை மாற்றி வார்த்தைகளுக்கு நடுவில் இடம் விட்டு எழுதும் பழக்கத்தை முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர் இவரே. ரீனியஸ் மொழிநடை யாவராலும் போற்றப்பட்டது.

இங்கிலாந்து திருச்சபையில், தான் குறைபாடுகளாகக் கருதியவற்றை ரீனியஸ் ஒரு நூலில் மதிப்புரைக்காக எழுதியதை அந்நூல் ஆசிரியர் பிரசுரிக்கவில்லை. ஆகையால் அதை ரீனியஸ் தாமாகவே பிரசுரித்து விட்டார். அதனால் சர்ச் மிஷன் சங்கம் (Church Mission Society) ரீனியஸின் பணி நீக்கும் உத்தரவை, 1835ல் அனுப்பி, ரீனியஸ்ருடனான உறவை முறித்துக் கொண்டது.

ரீனியசும் அவரைச் சார்ந்தவர்களும் அங்கு சென்று அங்கே ஒரு புதிய அமைப்பை நிறுவி ஊழியம் செய்து வந்தனர். திருநெல்வேலியிலிருந்து உபதேசியரும், மக்களும் அவரை வேண்டிக் கொண்டதன்படி, ரீனியஸ் அவருடைய ஆதரவாளர்களுடன் மீண்டும் திருநெல்வேலி திரும்பினார். திருநெல்வேலி சிந்துபூந்துறையில் யாத்ரிகர் சங்கம் என்ற சுவிசேஷ சங்கத்தை நிறுவி, சுவிசேஷத்தைக் கிராமங்களில் பரப்பினர். இதனால் பாளையங்கோட்டையில் இருந்த

ரீனியஸின் ஆதரவாளர்கள் சி. எம். எஸ். கோவிலுக்குப் போவதை நிறுத்திவிட்டனர். இதனால் அவர்களின் வழிபாட்டிற்காக அடைக்கலபுரத்தில் ஒரு ஜெபக்கூடம் கட்டப்பட்டது. அந்த ஜெபக் கூடம் தூய. யோவான் ஆலயம் என்ற பெயர் பெற்றது. இன்று அது சின்னக் கோவில் என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகிறது. கடைசியாக இவர் ஆங்கிலேய அரசுக்கு "வேதாகம சங்கத்தை" (Bible Society) ஆதரிக்க வேண்டும் என்று கேட்டு ஒரு கடிதம் எழுதினார்.

"1820 முதல் 1835 வரை" ரீனியஸின் வாழ்க்கை வரலாறே திருநெல்வேலி திருச்சபையின் வரலாறாகும் என மறைதிரு டி. ஏ. கிறிஸ்துதாஸ் குறிப்பிட்டுள்ளார். "உயர்ந்த கருத்துக்களைத் தெளிந்த நடையில் உணர்த்தும் திறன் ரீனியசிடம் அமைந்திருந்தது. அவர் தம் நூல்களில் அழகுண்ட, இனிடையுண்ட, நிரந்துரைக்கும் நேர்மையுண்ட, வகுத்தும் தொகுத்தும் உரைக்கும் வனப்பும் உண்டு" என்று ரீனியசைப் பற்றிச் சேதுப்பிள்ளை கூறியிருக்கிறார். பவுல் அப்போஸ்தலனுக்குப் பிறகு தோன்றிய மிகப் பெரிய மிஷனரி ரீனியஸ் என்று யாத மிஷனரி டாக்கர். உல்ப் (Dr. Wolf) என்பவர் தெரிவித்துள்ளார். இப்படியாக போற்றக் கூடிய தேவ பணியை செய்து முடித்த ரீனியஸ் 1838ம் ஆண்டு ஜூன் 5ம் திகதி அன்று மரணமடைந்தார். அவருடைய உடல் அடைக்கலபுரம், தூய யோவான் ஆலயக் கல்லறைத் தோட்டத்திற்கு வெளியே ஊரின் நடுவில் அடக்கம் செய்யப்பட்டது.

**ஆசிரியர். ஒகஸ்டின் போல்**



தூதன் குறுக்கெழுத்துப் புதிர் 05 க்கான
சரியான விடைகளை எழுதி அனுப்பி
வெற்றியாளராக தெரிவுசெய்யப்பட்டவர் உலப்பனையைச் சேர்ந்த
**எலக்சன்டர் எனிடா மேரி**
இவருக்கு எமது வாழ்த்துக்கள்.

# கடவுளின் நன்மை தன்மைகள்



## God's goodness

(பகுதி 01)

கடவுள் நல்லவர் என்பதையும், அவர் எமக்கு செய்த நன்மைகளையும் அறிந்து, புரிந்துகொள்வதென்பது கிறிஸ்தவர்களாகிய நமக்கு மிகவும் அத்தியாவசியமான காரியமாகும். மற்றும் கடவுளோடு உறவாடவும், கிறிஸ்தவ வாழ்வில் வளர்ச்சியடையவும் இவை நமக்கு உதவிசெய்யும்.

வேதாகமத்திலே, சங்கீதங்களிலே தேவனுடைய தாசர்கள் தங்களுடைய வாழ்வின் நன்மை, தீமை, பாதுகாப்பான, ஆபத்தான எல்லா சூழ்நிலைககளிலும் தேவனுடைய நன்மைகளையும், அவர் எவ்வளவு நல்லவர் என்பதைம் தியானித்து, ருசிபார்த்ததினால் தங்கள் விசுவாச வாழ்விலே பலப்பட்டு தேவனை பாடித்துதித்தனர், மற்றும் தேவன் நல்லவர் என்பதை சாட்சி பகர்ந்ததோடு கடவுளுடைய நன்மைமைத்தன்மைகளை அனுபவிக்கும்படி மற்றையவர்களுக்கு அழைப்பும் விடுத்தனர். ***“கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள் அவர்மேல் நம்பிக்கையாய் இருக்கிற மனுஷன் பாக்கியவான்.”*** சங்கீதம் 34:10.

நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்து உண்டாகி ஜோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகின்றது (யாக்கோபு 1:17). இவ்வார்த்தைகளின்படி நாம் அனுபவிக்கும் நன்மைகள் தேவனிடமிருந்து உண்டாகி நமக்கு கிடைக்கின்றது அதாவது Every Good and every perfect gift என்று ஆங்கிலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே உலகில் நாம் அனுபவிக்கும் சரீர, ஆவிக்குரிய நன்மைகளுக்கு கடவுள் மட்டுமே காரணராக இருக்கிறார்.

எனவே முழுமையான ஒரு நல்லவராக கடவுளை மட்டுமே நாம் காணமுடியும். அவர் நித்தியமானவர், எனவே அவர் தரும் நன்மையும் நித்தியமானது, அவருக்கு ஆரம்பமும் முடிவுமில்லை, எனவே அவருடைய நன்மைகளுக்கும் ஆரம்பமும் முடிவுமில்லை, அவரில்லாமல் எந்த நன்மையுமில்லை, "கர்த்தர் எல்லார் மேலும் தயையுள்ளவர், அவர் இரக்கங்கள், அவருடைய எல்லாக்கிரியைகளின் மேலுமுள்ளது (சங்கீதம் 145:9) - கடவுள் தனது எல்லா செயல்களிலும் தனது நன்மைத் தன்மைகளை வெளிப்படுத்துகிறவராக இருக்கிறார். அவர் நல்லவராய் இருப்பதால் அவருடைய செயல்களும் நன்மைகளைக் கொண்டதாகவே இருக்கின்றது.

**அவருடைய செயலாகிய படைப்பிலே அவருடைய நன்மைத்தன்மையின் வெளிப்பாடுகள்:**

தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார் அது மிகவும் நன்றாய் இருந்தது. ஆதியாகமம் 1:31. கடவுள் தன்னுடைய சிருஷ்டிப்பை நல்லது என்று கூறுகிறார் காரணம் நாம் மேல்கண்டதைபோல சிருஷ்டிகராகிய அவர் நல்லவர் எனவே அவரது செயலாகிய சிருஷ்டிப்பும் நல்லதே. கடவுள் எதிலும் சார்ந்திராமல் தன்னில்தானே நல்லவராகவும், அழகுள்ளவராகவும் இருக்கிறார் எனவே எந்த புறக் காரியங்களும் அவரை அழகுபடுத்தவில்லை மாறாக சிருஷ்டிக்கப்பட்டவை சிருஷ்டிகரின் அழகை பெறுகின்றது. அவரின் அழகை வெளிப்படுத்துகின்றது. அதேபோல அவர் எதிலும் சார்ந்து நன்மைசெய்யவேண்டிய அவசியமும் அவருக்கில்லை, ஏனெனில் அவர் தன்னில்தானே பூரண நல்லவராகவும் நன்மைசெய்கிறவராகவும் இருக்கிறார்.

"நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார் தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்." (அப்போஸ்தலர் 10:38). மனிதர்கள் எப்படி தங்கள் சுயநலத்தினால், பாவத்தினால், மீறுதலினால் கடவுளைத் துக்கப்படுத்தலாம், வேதனைப்படுத்தலாம் என்று சுற்றித்திரியும்போது, கடவுள்

இயேசுகிறிஸ்து அவர்கள் மத்தியில் மனிதனாக வந்து பாடுகளையும், துக்கங்களையும் சுமந்தவராய் இருந்தும் நன்மைசெய்கிறவராய் சுற்றித்திரிந்தார். அவர் நல்லவராகையால் அவர் செய்வதும் நல்லவையே. அவர் தனது அன்பில், இரக்கத்தில், மன்னிப்பில், கிருபையிலும், நல்லவராகவும், இந் நன்மைகளை மக்களுக்கு அளவில்லாமல் கொடுக்கிறவராகவும் இருக்கிறார். (பகுதி 2 ல் இதைக்குறித்து விரிவாகப் பார்க்கலாம்)

மனிதனுடைய படைப்பைப் பற்றி கிறிஸ்தவ சீர்த்திருத்த திருச்சபையின் விசுவாச அறிக்கையின் ஒன்றான ஹைடல்பேர்க் கெடிகிசம் என்கின்ற வினா, விடைபோதனையானது (Heidelberg Catechism) பின்வருமாறு கூறுகின்றது. **கேள்வி:** கடவுள் மனிதனை துன்மார்க்கனாகவும், மாறுபாடுள்ளவனாகவும், படைத்தாரா? **பதில்:** இல்லை கடவுள் மனிதனை நல்லவனாகவும், தன்னுடைய சாயலாக மெய்யான நீதியிலும், பரிசுத்தத்திலும், ஞானத்திலும் சிருஷ்டித்தார். தம்மை சரியாக அறிந்து, இதயப்பூர்வமாக நேசித்து நித்திய ஆசீர்வாதத்தில் அவருடன் வாழ்ந்து அவரை துதிக்கவும், மகிமைப்படுத்தப் படும்படியாகவும் படைத்தார்.

இங்கு நாம் கற்றுகொள்ளுகிற விடயம் என்னவென்றால் கடவுள் தன் ஜீவசுவாசத்தை தன்னால் உருவாக்கப்பட்ட மனிதன் நாசியிலே ஊதியபோது, அவன் ஜீவ ஆத்துமாவானான் இது மற்றைய படைப்புகளிலிருந்து அவனை விஷேடமானவனாக வேறுப்படுத்திக் காட்டுகின்றது, அதேபோல மனிதன் மட்டுமே தேவனோடு நெருங்கி உறவுகொள்ளும் இயலுமையோடும் அழியா ஆத்துமாவோடும் படைக்கப்பட்டிருக்கிறான் என்பதையும் காண்பிக்கின்றது.

மனிதனில் தேவனுடைய சாயலைப்பற்றி ஹைடல்பேர்க் கெடிகிசமம் இப்படியாக கூறுகின்றது, தேவசாயலானது தேவனுடைய ஆளுமையையும், சிந்திக்கும் திறனையும், பாச உணர்வையும், உடையதாக இருப்பதால், அச்சிந்திக்கும் திறனால், தன்னைப் படைத்த தேவனை அறிந்துகொள்ளவும், பாச உணர்வினால், இருதயப்பூர்வமாக அவரை நேசித்து சேவிக்கவும், கடவுளின் தன்மைக்கேற்றவிதமாக வாழ்க்கை நடத்தும் ஆற்றல் உள்ளவனாக சிருஷ்டிக்கப்படுகின்றான்.

எனவே தேவனோடு உறவாடி, அவரை அறிந்து அவருக்கு கீழ்படிந்து, அவரை மகிமைப்படுத்தும் நன்மையான ஆசீர்வாதத்தைக்கொடுத்து தேவன் மனிதனை படைத்திருக்கிறார். இந்த ஆசீர்வாதங்கள் யாவும், தேவனால் மனிதனுக்கு கிடைத்த நன்மையாகும். தேவன் தன் சாயலை மனிதனோடு பகிர்ந்துகொண்டதன் மூலம் அவர் அவனுக்கு நன்மைசெய்திருக்கிறார். எனவே நல்ல தேவனின் கரத்தின் கிரியையாய் மனிதன் இருப்பதாலே, சிருஷ்டிப்பிலே அவனும் நல்லவனாக இருக்கிறான் என்பதைக் காண்கின்றோம். இந்நன்மைக்காக நாம் அனுதினமும் தேவனை போற்றிப் புகழ, மகிமைப்படுத்த முடியும். "பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால் உம்மைத்துதிப்பேன்". (சங்கீதம் 139:14)

மனிதனை கடவுள் மண்ணினால் உருவாக்கினார் என்று நாம் வேதத்தில் வாசிக்கும்போது, நம் சரீரத்தில் உள்ளேயுள்ள உறுப்புகளாகிய யாவற்றையும், மூளை, கண்கள், காதுகள், வாய், நாக்கு, மூக்கு, இருதயம், கல்லீரல், சிறுநீரகம், நுரையீரல், மண்ணீரல், கணையம், இறைப்பை, குடல், எழும்புகள், நாடி நரம்புகள், இன்னும் பல உறுப்புக்களென இவை யாவற்றையும் தேவன் உருவாக்கினார். இவையெல்லாம் ஒன்றிணைந்து ஒரு பெரிய தொழிற்சாலையைப் போல மனிதனுடைய சரீரத்திற்குள் செயற்பட்டுக்கொண்டிருக்கிறது. மனித மூளை மற்றைய உறுப்புகளுக்கான சமிஞ்சையை அனுப்புகின்றது, இருதயமானது இரத்தத்திற்கு அழுத்தம் கொடுத்து முழு உடம்பின் உறுப்புகளுக்கும் தேவையான சத்துக்களை அனுப்புகின்றது, நுரையீரல் பிராணவாயுவை உள்ளிழுத்து இரத்த ஓட்டத்தை சீராக்குகிறது. இவைகள் ஆச்சரியமான விதங்களில் செயற்படுகின்றது. மனித வாழ்வின் இருப்புக்காகவும், நன்மைக்காகவும் தேவன் இவைகளை அவனுக்குள் ஞானமாய் உருவாக்கி இருக்கிறார். தேவன் நல்லவர் எனவே அவர் உருவாக்கிய மனித உடல் உறுப்புக்களும் நன்மையானதாகவே இருக்கின்றது.

பகலில் மனிதன் செயற்படும்படி வெளிச்சத்தையும், இரவிலே ஓய்வெடுக்கும்படி இருளையும் தேவன் உண்டாக்கி நன்மைசெய்திருக்கிறார். சரீரத்தைப் படைத்தவர் அவை புத்துணர்ச்சியுடன் இயங்கும்படி அதற்கான உணவு, ஓய்வு,

நித்திரையை கொடுக்க தேவன் காலங்களையும், (இரவு, பகல்) படைத்து அவர் மனிதனை தனது நன்மையினால் ஆசீர்வதிக்கின்றார். “உன் நித்திரை இன்பமாக இருக்கும்”. (நீதிமொழிகள் 3:24). நித்திரை நேரத்தில் நம் சரீர உறுப்புக்கள் புதுப்பிக்கப்பட்டு, புத்துணர்ச்சியடைகின்றது. எனவே எமது சரீரம், அதன் அவயவயங்கள், காலங்கள் யாவற்றிலும், நாம் தேவனின் நன்மையை கண்டு அவருக்கு நன்றி செலுத்தமுடியும். “கர்த்தர் நல்லவர் அவருடைய நாமத்தைக் கீர்த்தனம் பண்ணுங்கள் அது இன்பமானது” (சங்கீதம் 135:3)

சங்கீதம் 145:15,16: எல்லா ஜீவன்களின் கண்களும் உம்மை நோக்கிக்கொண்டிருக்கிறது. ஏற்ற வேளையிலே நீர் அவைகளுக்கு ஆகாரங்கொடுக்கிறீர். நீர் உமது கையைத் திறந்து, சகல பிராணிகளின் வாஞ்சையையும் திருப்தியாக்குகிறீர். ஜீவஜந்துக்களைப் படைத்தவர், அவைகளுக்கு ஆகாரம்கொடுத்து, பராமரித்து தனது பராமரிப்பின் நன்மைத்தன்மைகளை காண்பிக்கிறார். சங்கீதம் 119:68 தேவரீர் நல்லவரும், நன்மை செய்கிறவருமாயிருக்கிறீர். கடவுள் சிருஷ்டிகர், தான் சிருஷ்டித்தவைகளை போஷித்து பராமரிக்கிறவர், சூரியனை உதிக்கச்செய்து, மழையை பெய்யச்செய்து பயிர்களையும் தானியங்களையும் அளவில்லாது வளரச்செய்கிறார். அவைகளை மனிதனுக்கும், உயிர் வாழ் ஜந்துக்களுக்கும் ஆகாரமாகக் கொடுக்கிறார். (சங்கீதம் 136:25) “மாம்சதேகமுள்ள யாவுக்கும் ஆகாரங் கொடுக்கிறவரைத் துதியுங்கள் அவர் கிருபை என்றுமுள்ளது”

சிருஷ்டி கர்த்தர் நல்லவர், எனவே அவரின் கரத்தின் கிரியையாகிய அவருடைய சிருஷ்டிப்பிலும் அவருடைய நன்மைத்தன்மை ஒளிருகின்றது.

கடவுளின் நன்மைத்தன்மைகள் அடுத்த இதழிலும் தொடரும்.

*இலங்கை கிறிஸ்தவ சீர்த்திருத்த திருச்சபை*
*ரீஜன்ட் வீதி கிளை.*
*வேதப்படிப்பிலிருந்து தொகுக்கப்பட்டது.*

தொகுப்பு.
**திருமதி. வித்தியா சஷிகுமார்.**




# கதை நேரம்

அமெரிக்கா நியூயார்க்கில் உள்ள நயாகரா நீர்வீழ்ச்சியின் அருகே ரோஜர் உட்வார்ட் என்ற ஏழு வயது சிறுவன் ஒருவன், தனது பெற்றோர் மற்றும் அவனது 17 வயது சகோதரியான டீன் ஆகியோருடன் வசித்து வந்தான். 1960ம் ஆண்டு ஜூலை மாதம் 9ம் திகதியை அவனால் ஒருபோதும் மறக்க முடியாத நாளாகும். அவனது குடும்பத்தின் நல்ல நண்பனான ஜிம் ஹனிகட் மரணித்த நாளாகும். அன்று ஜிம் ஹனிகட்டின் நினைவு நாள். ரோஜரினால் அன்று நிம்மதியாக இருக்க முடியவில்லை. மனதில் குழப்பத்தோடு தனது சாய் நாற்காலியில் அமர்ந்து சிந்திக்க லானான். அன்று நடந்த சம்பவங்கள் அவன் கண் முன்பாக வந்துபோயின.

ஜிம் ஹனிகட், ரோஜரையும் அவரது சகோதரியையும் நீர்வீழ்ச்சிக்கு மேலே உள்ள நயாகரா ஆற்றில் படகு சவாரி செய்ய அழைத்தார். சிறிய அவுட்போர்டு மோட்டார் மூலம் இயக்கப்படும் படகில் அவர்கள் கிராண்ட் தீவிலிருந்து புறப்பட்டபோது, ரோஜரின் தந்தை அவரை அழைத்தார். நீங்கள் எந்த வேளையிலும் இந்த லைப் ஜாக்கெட்டை (life jacket) அணிய நினைவில் கொள்ளுங்கள் என்று மூன்று லைப் ஜாக்கெட்களைக் (life jacket) கொடுத்தார். இது எனக்கு தெரியும் படகு சவாரி செய்பவர்கள் அணிந்திருப்பதை நான் பார்த்திருக்கின்றேன் என்று டீன்னா சொன்னாள். ஆமாம் இது உங்களின் பாதுகாப்பு கவசமாக இருக்கின்றது எனவே ஒருபோதும் இதனை கழட்டிவிடவேண்டாம் என்று அவனது தந்தை திரும்பவும் எச்சரித்தார்.

அது ஒரு மிகவும் சூடான நாளாக இருந்ததால், ரோஜர் லைப் ஜாக்கெட்டை கழற்ற விரும்பினான். ஆனால் ஜிம், ரோஜரின் தந்தையின் எச்சரிக்கையை

நினைவில் வைத்துக்கொள்ள வலியுறுத்தினான். இவர்கள் அனைவரும் மிகுந்த குதூகலத்துடன் சவாரி செய்துக்கொண்டிருந்தார்கள். ஜீம் கராண்ட் ஐலேண்ட் பாலத்தின் கீழ் நீரில் செல்ல முடிவு செய்தார். அந்த பகுதி ஆபத்தானது மற்றும் அதன் கீழே உள்ள நீர் கொந்தளிப்பானதாக இருக்கும். ஆனால் இவர்கள் எதை குறித்தும் கவலைப்படாமல் துணிந்து அதிலே சென்றார்கள். படகு அந்த கொந்தளிப்பான நீரில் மேலும் கிழும் போய் வருவதானது அவர்களுக்கு அதிக ஆர்வத்தை கொடுத்தது. ரோஜர் படகை இயக்க அனுமதி கேட்டான். அவன் சிறுவனாக இருக்கின்றதால் அவனால் முடியாது என்று ஜிம் சொல்ல, ஜிம் உன்னைப் போல அனுபவமிக்க படகோட்டி இருக்க ஏன் பயப்படுகின்றாய் ரோஜர்க்கு கொடுத்து பாரும் என்று டீன்னா சொன்னாள். உண்மையிலேயே ஜீம் ஒரு சிறந்த படகோட்டி. பல முறை படகோட்டி போட்டியில் வென்று பரிசும் பெற்றிருக்கின்றான். எனவே ஜிம் ரோஜரை படகோட்ட அனுமதித்தான்.

ரோஜர் மிகவும் அவதானமாக ஜிம்மின் வழிநடத்தலின் படி படகை செலுத்தலானான். தீடீரென நீர்வீழ்ச்சியிலிருந்து மூடுபனி எழுவதை அவர்கள் கண்டார்கள். பதற்றமடைந்த ரோஜரால் படகை சரியான பக்கம் செலுத்த முடியவில்லை. சில நிமிடங்களுக்குப் பிறகு, மோட்டாரின் சத்தம் தீடீரென அதிக சத்தமாக மாறியது. படகு மூடுபனியினால் ஒரு பாறையில் மேதியது, படகை இயக்க முடியவில்லை. படகு தனது கட்டுப்பாட்டை இழந்து நீரில் அடித்து செல்லப்படுவதை அறிந்த ஜிம், தனது அனுபவத்தினால் முயற்சித்தான் அவனால் படகை சரிசெய்ய முடியவில்லை. லைப் ஜாக்கெட்டை உடனே அணியுமாறு கூறினான். தீடீரென்று ஒரு பெரிய அலை படகு கவிழ்ந்தது, மூன்று பேரும் தண்ணீரில் தூக்கி எறியப்பட்டார்கள். படகு தூக்கி எறியப்பட்டதில் ஜிம்மின் லைப் ஜாக்கெட்டும் தண்ணீரில் விழுந்தது. டீனா படகைப் பிடிக்க முயன்றாள், ஆனால் முடியவில்லை. அவள் கரைக்கு நீந்தினாள். கரையில் ஜனங்கள் கூட்டமாக இருப்பதைக் கண்டு காப்பாற்றுமாறு சத்தமிட்டாள். அந்த கூட்டத்திலிருந்த ஜான் ஹேய்ஸ் என்பவர் சத்தத்தை கேட்டு உடனே அவர் நீந்திச் சென்று டீனின் கையைப் பிடித்து அவளை பாதுகாப்பாக கரைக்கு இழுத்துச் சென்றார். என் தம்பி! ஜீம்! அவர்களுக்கு என்ன ஆயிற்று? காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள் என்று அவள் அழுதாள். அந்த நீரில் அடித்து செல்லப்பட்டவர்கள் யாரும் உயிர்பிழைத்ததே இல்லை, அவருக்காக பிராத்தனை செய்யுங்கள் என்று மட்டுமே சொல்ல முடிந்தது அங்கு கூடியிருந்த ஜனங்களால்.

அதே வேளை ஜிம்முக்கும் ரோஜருக்கும் என்ன நடந்தது? அவர்கள் தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டபோது ஜிம் ரோஜரிடம், பயப்படாதே! நான் உன்னைப் பிடித்துக் கொள்கிறேன்! என்று அவனது கரத்தை இறுகப் பிடித்து

இருவரும் கரைக்கு செல்ல முயன்றனர். ஆனால் அந்த சக்திவாய்ந்த நீரோட்டம் அவர்களைப் பிரித்தது. அவர்களின் படகுடன் அவர்களும் நீர்வீழ்ச்சியில் அடித்துச் செல்லப்பட்டார்கள்.

100 ஆண்டுகளுக்கு மேலாக The Maid of the Mist என்ற பயணிகள் படகு சுற்றுலாப் பயணிகளை நீர்வீழ்ச்சி வழியாக கீழே உள்ள ஆற்றிற்கு அழைத்துச் சென்றது. இந்த குறிப்பிட்ட திகதியில் The Maid of the Mist இன் கெப்டன் Clifford Keech என்பவர் படகை 200 அடிகளுக்குள், தான் செல்லத் துணிந்த அளவுக்கு அருகில் கொண்டு சென்றார். அவர் தனது படகைத் திருப்பப் போகிறார். அப்போது அவர் யாரோ ஒருவர் சிவப்பு லைப் ஜாக்கெட்டில் 50 அடி தூ ரத்தில் தத்தளிப்பதை காண்கின்றார். விரைந்து சென்று பல முயற்சிகளுக்குப் பிறகு, ரோஜர் காப்பாற்றப்பட்டு பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டான்.

டீன்னும் ரோஜரும் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். ஆனால் அவர்களுக்கு சில காயங்கள் மட்டுமே இருந்தன, விரைவாக வைத்தியசாலையிலிருந்து விடுவிக்கப் பட்டார்கள். சில நாட்களுக்குப் பிறகு ஜீம் ஹனிகட்டின் உடல் கண்டெடுக்கப்பட்டது. நீர்வீழ்ச்சியின் அடிப்பகுதியில் உள்ள பாறைகளில் அடிப்பட்டு இறந்துப்போனான். ஜீம் ஹனிகட்டின் சடலத்தை பார்த்து ரோஜர் சத்தமிட்டு அழுதன். அவனால் தனது துயரத்தை அடக்கிகொள்ள முடியவில்லை. அப்போது யாரோ ஒருவர் தன்னை கூப்பிடுவதை உணர்ந்தான். உடனே கண்திறந்து பார்த்தான். அது அவனது நண்பனான டேவிட்.

டேவிட் ரோஜரைப் பாரர்த்து, “ஏன் நீ அழுகிறாய்” என்று கேட்க, ஜீம் ஹனிகட் இறந்து இன்றோடு 20 வருடங்கள் முடிகின்றது. ஆனாலும் அந்த துயரமான சம்பவத்தை மட்டும் என்னால் மறக்க முடியவில்லை. கடவுள் ஏன் தன் உயிரை மட்டும் காப்பாற்றினார் என்று நான் ஆச்சரியப்படுகிறேன். ரோஜர் மற்றும் டீன் இருவரையும் இந்த பயங்கரமான மரணத்திலிருந்து காப்பாற்றியது எது? அவரை யாரோ ஒருவர் கண்காணித்திருக்க வேண்டும் என்றும், யாரோ அவருக்காக ஏதாவது விசேஷமாக திட்டமிட்டிருக்க வேண்டும் என்று மக்கள் சில சமயங்களில் கூறுவதை நான் கேட்டிருக்கிறேன். ரோஜர் ஏன் உயிர்ப்பிழைத்தாய்? எங்கே போகிறாய் என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டிருக்கிறேன். அதற்கு இதுவரை யாராலும் திருப்திகரமான பதிலைக் கொடுக்க முடியவில்லை என்று டேவிட்டிடம் கூறினான்.

டேவிட் சற்று சிந்தித்தவராக, ரோஜர் நீ என்னோடு வா என்று அவரை ஒரு நற்செய்தி கூட்டத்திற்கு அழைத்து சென்றார். அங்கே கர்த்தராகிய இயேசுவைப் பற்றியும், பாவிகளை இரட்சிக்க அவர் உலகத்திற்கு வந்ததைப் பற்றியும் கேள்விப்பட்டான். அன்று மாலையே அவன் தன் நண்பன்

அருகில் மண்டியிட்டு, கர்த்தராகிய இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டான். அதன் பின் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு, 1990இல், அவர் மரணத்திலிருந்து உயிப்பிழைத்து 30 ஆண்டுகளுக்குப் பிறகு, நயாகரா நீர்வீழ்ச்சிக்கு அருகே வசிக்கும் மக்களுக்கு நற்செய்தியை பிரசங்கிக்கச் சென்றார். 30 ஆண்டுகளுக்கு முன்பு என்னைக் காப்பாற்றிய கடவுளின் நோக்கம் என்ன என்பதை என் வாழ்க்கையில் முதல்முறையாக நான் அறிந்தேன் என்று அவர் கூறினார். நான் ஏன் வாழ்கிறேன்? மற்றவர்களுக்கு கிறிஸ்துவைப் பற்றியும் இரட்சிப்பை பற்றியும் அறிவித்து, நித்திய மரணத்திலிருந்து காப்பாற்றவே என்பதை அறிந்துகொண்டு, தனது வாழ்வை அதற்காகவே ஒப்புக்கொடுத்தார் ரோஜர்.

ஆம் அருமையானவர்களே, ரோஜர் உட்வார்டின் அனுபவம் தனித்துவமானது. நயாகரா நீர்வீழ்ச்சியில் விழுந்தவர் எவரும் உயிர்ப்பிழைத்ததில்லை. ஆனால் ரோஜர் உட்வார்டின் மீது தேவன் ஒரு திட்டம் வைத்திருந்தார். அதற்காகவே அவரை அந்த கொடூரமான சம்பவத்திலிருந்து காப்பாற்றினார்.

அன்பு தம்பி தங்கைகளே! உங்களையும் இது போன்ற ஏதோ ஒரு கொடூரமான சம்பவத்திலிருந்து தேவன் காப்பாற்றியிருக்கக் கூடும். அவர் உங்களுக்கும் ஒரு திட்டத்தை வைத்திருக்கின்றார். ரோஜர் உட்வார்ட் தேவ திட்டத்தை அறிந்துகொள்ள 30 வருடங்கள் போனது. அதுபோல இப்போது உங்களுக்கான திட்டத்தை உங்களால் அறிந்துகொள்ளாவிட்டாலும். நிச்சயமாகவே உங்களுக்கான ஒரு தேவ திட்டம் உண்டு உன்பதை அறிந்து அவருக்காகவும், அவர் பணிக்காகவும் உங்கள் வாழ்வை ஒப்புக்கொடுங்கள்.

*“நான் உன்னைத் தாயின் வாயிற்றில் உருவாக்கும் முன்னே உன்னை அறிந்தேன். நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம்பண்ணி, உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன் என்று சொன்னார்.”* (எரேமியா 1:5)



**- ஆசிரியர். ஒகஸ்டின் போல் -**

# நிறந்தீட்டுவோம் ...



# குறுக்கெழுத்துப் புதிர் - 06




சரியான விடையெழுதி, **2024-07-31ம்** திகதிக்கு முன்பு எமக்கு அனுப்பி, குலுக்கல் முறையில் பரிசினை வென்றிடுங்கள்.

**இடமிருந்து வலம்**

1. இவன் கலகம்பண்ணி, கொலை செய்த ஒரு கள்வன். ஜனங்கள் கேட்டுக் கொண்டதற்காக விடுதலையானவன்

3. இவள் புறஜாதியை சேர்ந்தவள், எலியாவைக் கொன்று போட எண்ணியவள். (குழம்பியுள்ளது).

4. இங்கே பன்னிரண்டு நீரூற்றுகளும் எழுபது பேரீச்சமரங்களும் இருந்தன.

6. அவன் நதியிலே ஏழுதரம் ஸ்நானம்பண்ணிச் சொஸ்தமானவன் (குழம்பியுள்ளது).

8. லாபானும், யாக்கோபும் பொருத்தனை செய்து ஒரு கற்குவியலை உண்டாக்கின இடம்.

**மேலிருந்து கீழ்**

1. மாய வித்தைக்காரனும் கள்ளத்தீர்க்கதரிசியுமான ஒரு யூதன்.

2. இவன் பவுலைக் காவல்பண்ணினான். தன் மனைவியோடு பவுலை விசாரித்தான். தனது விடுதலைக்காக பணம் கொடுப்பான் என்று நம்பினவன். (குழம்பியுள்ளது).

4. இது ஆசாரியர்கள் அணிந்துக்கொள்ள வேண்டிய பரிசுத்த வஸ்திரங்களில் ஒன்று.

5. இவன் தாவீதின் குமாரர்களில் ஒருவன். (மேலிருந்து கீழ்)

6. ஆரோனின் குமாரன்.

7. சிமியோனுடைய குமாரர்களில் ஒருவன்.




கடந்த பெரிய வெள்ளி அன்று 29-03-2024 மாளிகாகந்த திருச்சபையினர் துண்டுப்பிரசுரங்களை விநியோகிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தபோது எடுக்கப்பட்ட சில படங்கள்.











பிரசங்கவியல் பாடத்தினை நிறைவு செய்த மாளிகாகந்த திருச்சபையைச் சேர்ந்த சகோ. மூர்த்தி மற்றும் சகோ. ராஜேஸ்வரன் ஆகியோருடன் போதகர் ஒகஸ்டின் மற்றும் சகோ. மணிவண்ணனைப் படத்தில் காண்க.

ADDRESS : Thoothan Cross word (01)
363, Galle Road, Wellawatte, Colombo 6, Sri Lanka.

WhatsApp 0777 045 994